சுதேசமித்திரன்

26, டிசம்பர் '48 .... 4. அணா



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

I-WW108-111'

W. WOODWARD LTD LONDON. ENGLAND

எந்த வியாதியையும் குணப்படுத்தும் சிறந்த மருந்து; கைதேர்ந்த சிகிச்சை.

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியரின்

ஆரிய வைத்தியாச்ரமம்

குமரன் வீதி, **திருப்பூர்.** பிராஞ்சு:- பல்லடம்.

வெளியூர் வாசிகள் நோயின் நிலைமையை விவரமாக எழுதினால், தகுந்த சிகிச்சை தெரிவிப்பதுடன், மருந்துகளும் ரெயிலில் அல்லது தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியர் பிரதி திங்கட்கிழமை பல்லடம் பிராஞ்சுக்கு வந்து முக்கியமான கேசுகளைப் பார்ப்பார்.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு...........................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க.....................................ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுநீர்கள்,
பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனுன ஆர். கிருஷ்ணு பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்,

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உரை அனுப்பினுல் 50—0-0-3 பொட்டலம் இனும.

S. M. கிருஷ்ணு அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கல் தெருவு.
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானுல் ரியல் அசோகா அண்டு கோவுடன் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸ்லைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம், கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ் : வால்டேர், ஆர். எஸ். | லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

ரூ. 500 இனாம்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த சித்த யந்திரம்.

சக்தி வாய்ந்தது. இந்த "கவசத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் நீர் விரும்பும் (ஆண், பெண்) எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனாம்.

செப்பு மூடியுடன் ரூ. 5
மூன்று வாங்கினால் ரூ. 12.

வெள்ளி மூடியுடன் ரூ. 7.
மூன்றுக்கு ரூ. 18.

தங்க மூடியுடன் ரூ. 15.
மூன்றுக்கு ரூ. 40.

Sri Kamrup Kamakshya Ashram,
199/B, P.O. Rajdhanwar, (Hozaribagh)

எலக்டிரிக் சாமான்கள்

ENGLISH MAKE

Switches Porcelain Base.	Dozen Rs.	19-8-0
Staircase Switches	,, ,,	36-0-0
Holders Bakelite	,,	8-8-0
Cealing Roses Bakelite	,,	8-12-0
Wallplugs & Pins Bakelite	,,	15-8-0
C.M.A. 1/18 V.I.R. COILS 100 yards		15-8-0
,, 14/36 Flexable wires	,,	30-0-0
15 to 30 walls India Bulbs Dozen		18-8-0
15 amp. Ironclad Main Switches each		11-0-0
9'' O. C. Braket & Holder	,,	2-8-0
Kantark 15 amp. Fuse units	,,	3-0-0
11 m-m pipes. 10 Feet	,,	3-8-0
2½ amp. A. C. Venner Meters	,,	50-0-0
Transformer lights GEC	,,	8-0-0
Langham Shades "Colour Border"	,,	2-8-0

மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும்.

M. R. PARTHASARATHY IYENGAR

Electrical Dealers

29A, T. P. KOIL STREET

TRIPLICANE :: MADRAS. 5

முத்து கழுத்து சங்கிலி



இமிடேஷன் ஜ்வல்கள் (வைரம்பச்சை, சிகப்பு அல்லது நீலம்) பதித்தஸ்திரீகளுக்கான சிறந்த கழுத்து சங்கிலி. க்ரீம் டிண்டுகளுடன் முத்துக்களும் உண்டு. நிரந்தர கலர், லாக்கெட்டுடன் முழு சைஸ் ரூ. 3-10. இமிடேஷன் ஜுவல் பதித்த தங்க மோதிரம் மேல்கண்ட ஜுவல்களுடன் டஜன் ரூ. 5-8. ஜுவல் இல்லாது பூவேலைகளுடன் டஜன் ரூ. 4-8. ஒரு டஜன் எந்தவித மோதிரம் வாங்கினாலும் மேற்கண்ட கழுத்து சங்கிலி இனாம். எல்லாவற்றிற்கும் தபால் செலவு இலவசம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத கோருகிறோம்.

போட்டோ படங்கள்:-பிரபல பாரிஸ் அழகிகளின் படங்கள். வயது 16 முதல் 20 வரை, ரகசிய விவரணை கூடாது. டஜன் விலை ரூ. 4/8, எல்லாத்தேச தலைவர்கள் காந்தி, நேதாஜி முதலியவர்களின் படங்கள் டஜன் ரூ, 3/8. தபால் கார்டு சைஸ், தபால்செலவு கிடையாது. 1 அணா ஸ்டாம்பு அனுப்பி, ஆயுள் பூராவும் உபயோகிக்கக்கூடிய காலண்டரை பெறலாம்.

HENA AGENCY,
NO. 14, Dr. Jagabandhu Lane, (S.W.)
Bowbazar P. O., CALCUTTA.



அபரிமிதமான ஜீவசக்தி வெற்றிபெற உதவுகிறது

அம்ருதா ரத்த சுத்தி திராவகம்

தேகப்பயிற்சி செய்வோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரத்த சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும்

தமிழ்நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்.

பர்ஹாம்பூர் - செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை.

ஆஸ்த்மாவை குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீர்ணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, சுவாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

மதராஸ் ஸ்டாகிஸ்டுகள்: தாரா & கோ, நைனியப்ப நாய்க்கன் தெரு.



501 ஸோப்பால் வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் - பாதம் எண்ணெய் - அம்லா ஹேர் ஆயில் - வாசனை திரவியங்கள் எண்ணெய் - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் - ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபி கலந்து - பஞ்சாப் சோனா - முந்திரி பன்னீர் - ஜெவாடா - முரப்பா. நெல்லிக்காய் - இஞ்சி. மாங்காய்.

தயாரிப்பவர்கள்:—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம் இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர். நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செலவம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3.
தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும். பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai, (Gaya)

காச குலாந்தகம்

சரீரம் மெலிந்து, அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து, பார்வை குன்றி, கஷ்டப்படும் அன்பர்களே!

சுவாசக் குழாய்களிலும், சுவாசப் பைகளிலும் தடைபட்டு நிற்கும் கபம் விலகிப்போவதைத் தவிர, நெஞ்சிலும், விலாப்பக்கத்திலும் வலி, இருமல், இழுப்பு, பலக்குறைவு, மார்பு அடைப்பு, தலைவலி, காய்ச்சல், குரல் அடைப்பு, நாசி வழி ஜலம் வடிதல், க்ஷயம், சுவாசக் குழாய்களிலிருக்கும் புழுப்பு, கபத்தாலுண்டாகும் இழுப்பு முதலிய சுவாசப்பையை ஒட்டிய சகலவித நோய்கள் யாவற்றையும், ஆதவனைக் கண்ட பனிபோல் விரைவில் மாற்றிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கடின பத்தியமில்லை.

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM.
189, வக்கீல் புது தெரு - P. B. No 27. மதுரை.
கிளை ஸ்தாபனங்கள்:— 207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம். 20, கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58E. தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர். 179. SEA ST., COLOMBO.

விடாத இருமல், ஜலதோஷம்.
இன்புளுயன்ஸாவுக்கு பெப்ஸ்
தேவையாகவிருக்கும்

நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லைகள் சீக்கிரமாகப் பலனளிக்கும் விதத்தில் வேலை செய்கின்றன. சுவாசத்துடன் மருந்து சத்துக்கள உடனே தொண்டை, மார்பு தகராறுக்கு காரணமான வைகளை ஒழிக்கும் பெப்ஸை சென்றவுடன் அவன் கிருமிநாச குணமளிக்கும் ஆவிகள் இருமலை நிறுத்தி புண்ணாகிய உறுப்புகளைச் சமனமூட்டி. கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கி உமது மார்புக்கும் தொண்டைக்கும் சுகமுண்டாக்கும்.

பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதை குறிக்கும் படம்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

PEPS

கரும் நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1 ரூ. 7.

பஞ்சாமிர்த லேகியம்

பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வதி யந்திரம், ஸ்ரீ தன்வந்தரீ யந்திரம் இவைகள் மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சை யுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34 சாந்தோம், சென்னை 4.

தேவாம்ருதம்
"பீம-வீர்"
சாஸ்வத சக்தியை கொடுக்கும்



देवामृतम
'भीम-वीर'
शाश्वत शक्ति देनेवाला है

RESTORES MAN HOOD
Nectar of Life
MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீர்ய சக்தியையும், வலுவையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3—12—0 பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4.

உங்கள் எதிர்காலம்

பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8, ஒரு வருஷத்திற்கு மாசவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரூ. 5. த.செ.தனி

வி. கே கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5

RAHAMATH PHARMACY

(Estd 1925)

55, Parish Venkatachala Iyer St. G. T., Madras.

சகல வியாதிகளுக்கும் கைமேல் பலன் தரும் யூனனி ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்யுமிடம்.

உத்தரவாதம் கொடுத்து ஆஸ்த்மா, ஈளை, சுவாச இருமல், சகல மேக வியாதிகள், குன்மம், சூதகவலி, சூதக கோளாறுகள், ரத்த மூலம், படை, சர்ம வியாதிகள் இவைகளுக்கு கைகண்ட யூனனி சிகிச்சை.

அநேக நற்சாட்சிகளை நேரில் பார்வையிடலாம்.

பரீக்ஷியுங்கள்.

வைரங்கள், நகைகள்



பருமனைக்கொண்டு மட்டும் வைரத்தின் மதிப்பை அளவிட முடியாது.
வர்ணம், பட்டை பிரகாசம், இவற்றையும் கொண்டே மதிப்பிட வேண்டும்
ஆகையால் வைரமோ, வைரம் பதித்த நகைகளோ வாங்கும்போது. நம்பிக்கை
யும் அனுபவமும் வாய்ந்த நகைவியாபாரியின் உதவியை நாடவேண்டும்.

உம்மிடி
ராமையா செட்டி குருஸாமி செட்டி & கோ.
23-25. சைனாபஜார் ரோடு. சென்னை.

BJK 103 T.M

பரிசு - பரிசு - பரிசு

கிருஸ்துமஸ் பண்டிகை சமீபித்துவிட்டபடியால், மகாத்மா காந்திஜியின் ஞாபகார்த்தமாக கைத்தறிகளினுல் தயார் செய்த இட்டாலி சில்குகளில் சாரி, சோமன், அங்கவஸ்திரம் டிசம்பர் முதல் 30-12-48 வரை பரிசு வழங்கப்படும்.

பரிசு திட்டம்

35 ரூபாய் விலையுள்ள 3x8 சில்கு சோமன் ஒன்றும், அங்க வஸ்திரம் ஒன்றும் ரூபாய் 20-க்கும், 24 ரூபாய் விலையுள்ள 6 கெஜம் சில்கு சாரி ஒன்று ரூபாய் 12-க்கும் பரிசு வழங்கப்படும். நபருக்கு ஒன்றுக்குமேல் வினியோகம் செய்யப்படமாட்டாது. இத் திட்டத்தில் சேருபவர்கள் இதைக்கத்தரித்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

பெயர்.................................

ஊர்.................................

Sri Ram Silk Factory,
Kottar (S. Travancore.)

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை. 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு பரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ மார்கழி௴ 12௳ ★ 1948-௵ டிசம்பர்௴ 26௳ No. 48

ஜெய்பூர் காங்கிரஸ்

சென்ற வாரம் ஜெய்பூரில் கூடிய 55-வது காங்கிரஸ், சுதந்திர இந்தியாவில் கூடிய முதல் காங்கிரஸ். எந்த நோக்கத்துக்காக இந்த தேசீய ஸ்தாபனம் ஜனித்ததோ அது நிறைவேறிவிட்டது. கத்தியின்றி, ரத்தமின்றி சத்தியம், அஹிம்ஸை இரண்டையும் கைக்கொண்டு தேச பிதா மகாத்மாஜியின் தவநெறியில் சென்று சுதந்திரம் சம்பாதித்தாகிவிட்டது. இதைத் தொடர்ந்து நாட்டில் நடந்திருக்கும் சம்பவங்கள் பல. ராஷ்டிரபதி டாக்டர் பட்டாபி இவற்றையெல்லாம் தமது அக்கிராஸனப் பிரசங்கத்தில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸின் நடை முறையை அவ்வப்போது சிரிய பாதையில் திருப்பிவிட்டு, அற்புதமான உபதேசங்களை செய்து அதன் பயனாக நமக்கு விடுதலை தேடிக்கொடுத்த மகாத்மாவின் நினைப்பு காங்கிரஸில் கூடியிருந்த ஒவ்வொருவருடைய இதயத்தையும் கவ்வியது இயற்கையே. எனவே டாக்டர் சீதாராமய்யா தேச பிதாவைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். சுதந்திர இந்தியாவில் காந்திஜியை நாம் இழந்ததுடனில்லாமல் சென்ற ஒன்றரை ஆண்டுகளில் நமக்கேற்பட்ட அல்லல்கள் இவ்வளவு அவ்வளவல்ல ஆனால் எதிரிகள் பிரமிக்கும்படியான வகையில் இவற்றைச் சமாளித்திருக்கிறோம்.

சங்கடங்களைச் சமாளித்ததுண்மையே. ஆனால் எதிர் காலத்தில் செய்ய வேண்டிய வேலையே மிக முக்கியம். சுதந்திரத்தின் பயனை அப்போதுதான் அனுபவிக்க இயலும். நாடு இன்றுள்ள நிலையில் பொருளாதார வாழ்வு சீர்பட வேண்டும். அப்போதுதான் அடைந்திருக்கும் அரசியல் சுதந்திரம் நனவாகும். இதையே டாக்டர் பட்டாபியும் தெரிவித்திருக்கிறார். ஜனங்களை வறுமைப்பிணியிலிருந்து மீளச் செய்வது அவசர வேலை. இத்துடன் பொருளாதார நிலை உயர்ந்து செழிக்க வழி காண்பதும் அவசியம். சமூக வாழ்வில் அமைதியைக் கெடுக்க வரும் காளான்களை களைந்தெறிய வேண்டும்.

சமூக, பொருளாதார க்ஷேமாபிவிருத்திக்கான இத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதில் காங்கிரஸ் மேற்கொள்ளக்கூடிய பொறுப்பென்ன? இந்தப் புதிய பொறுப்பை நிறைவேற்றி வைக்கக்கூடியவாறு அந்த ஸ்தாபனத்தில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் யாவை? இவையே முக்கியமான காங்கிரஸ் பிரச்னைகள். ஜனப்பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அரசாங்கமே நாட்டில் இயங்கிய போதிலும், டாக்டர் பட்டாபி எடுத்துக்காட்டியதுபோல், இந்த அரசாங்கத்தை நேரான வழியில் செலுத்துவதில் காங்கிரஸ் உபயோகிக்கக்கூடிய செல்வாக்கு மகத்தானது. காந்திஜியின் தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சுயநல நினைவின்றி, சமுதாய க்ஷேமமொன்றையே குறியாகக் கொண்டு செய்து வந்த சேவையால் ஏற்பட்ட செல்வாக்கு இது. இந்த உயரிய நோக்குடன் கூடிய பணி, தேசத்தின் தற்போதைய நிலையில் இன்னும் பன்மடங்கு அவசியம். ஆனால் சமூக க்ஷேமத்தில் அந்தரங்கமான அக்கரை கொண்ட காங்கிரஸ் வாதிகளின் தொகை தற்போது வேகமாகக் குறைந்து வருகிறது. புதிதாகப் பதவியோ, அதிகாரமோ பெற்ற பல காங்கிரஸ்காரர்கள் சுயநல நோக்குடன் அவற்றைத் துஷ்பிரயோகம் செய்து வருவதை காரியக்

—அடுத்த பக்கம் பார்க்க.

கமிட்டி துக்கத்தோடு எடுத்துக்காட்டியிருக்கிறது. இதொருபுறமிருக்க, ஆங்காங்குள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்கும், மந்திரி சபைகளுக்கும் அடிக்கடி தகராறு மூண்டு வருகிறது. இவைகளிடை சீரான ஒத்துழைப்பு ஏற்படச்செய்வது அத்தியாவசியம். டாக்டர் பட்டாபி வற்புறுத்தியிருப்பதுபோல, முதலில் காங்கிரஸுக்குள் உள்ள களங்கங்களை அகற்றி அதை ஒரு சக்தி வாய்ந்த ஸ்தாபனமாகச் செய்தாலேயே அது புதிய நிலைமையில் தனக்கேற்பட்டுள்ள பொறுப்பை சிறக்க நிறைவேற்றி வைக்க முடியும்.

இப்போது நம்மை எதிர் நோக்கி நிற்கும் பிரச்னைகள் பலவற்றைப்பற்றி காங்கிரஸ் மகா சபையில் விவாதம் நடந்திருக்கிறது. இவற்றைச் சமாளிப்பதற்காக இந்திய சர்க்கார் கைக்கொண்டிருக்கும் வேலை முறைக்குப் பொதுவாக அங்கீகாரமளிப்பதுடன் மேற்கொண்டு இத்துறையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றியும் காங்கிரஸில் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. மத்தியிலும், மாகாணத்திலும் இயங்கும் சர்க்கார்களைக் காங்கிரஸ் கட்சி நடத்தி வைப்பதால் அதன் பொறுப்பு மிக்க மகத்தானது. நாடு சுதந்திரமடையும் முன்னர் இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தோரிடம் கண்ட சுயநலமற்ற தியாக சேவை இன்று பலரிடம் பறந்து போய்விட்டது. பதவி, அதிகாரம் இத்துறைகளில் வேட்கை மிகுந்து சுயநலம் ஓங்கி, இறுதியில் ஸ்தாபனத்துக்கே அவக்கேட்டைக் கொண்டு வரக்கூடிய நிலை பிறந்திருப்பதைக் காங்கிரஸ் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறது. இது குறித்து கொண்டு வரப்பட்ட தீர்மானம் பிரதம மந்திரி நேருவும், ஸர்தார் படேலும் சபையில் இல்லாத சந்தர்ப்பத்தில் நிறைவேறியது. பண்டித ஜவாஹர் இத்தீர்மானத்தின் போக்கு மத்திய, மாகாண மந்திரிகளையும், சட்ட சபை மெம்பர்களையும் தூற்றும் தோரணையிலிருப்பதால், திட்டமாகத்தங்களைப் பற்றி காங்கிரஸ் என்ன நினைக்கிறதென்பதைச் சொல்லிவிட வேண்டுமென்றும், இப்போதுள்ள தீர்மானத்தின் அமைப்பு வேறுவித அர்த்தத்தையே கற்பிக்கிறதென்றும் குறிப்பிட்டு மீண்டும் அத்தீர்மானத்தை புனராலோசனை செய்யும்படி வேண்டிக்கொண்டு பேசினார். ஸர்தார் படேலும் அவரைத் தொடர்ந்துபேசினார். காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து, பிறருக்கு உதாரணமாக விளங்க வேண்டுமென்ற அடிப்படைக்கருத்து அத் தீர்மானத்தில் விடுபடவில்லை.

நாட்டின் உள் விவகாரங்களைப் பொறுத்தவரை நம்மிடையுள்ள ஒற்றுமையை மேன்மேலும் வலுப்படுத்தும் பொருளாதாரச் செழிப்புக்கு வகைகள் செய்வதும் அவசரம். குறிப்பாக வகுப்பு வெறி ஓங்க விடுவதன் பலனை நாம் ஏற்கெனவே மிகப் பயங்கரமான முறையில் அனுபவித்துவிட்டோம். மறுபடி இதற்கு இடங் கொடுப்பதற்கில்லை. எவ்வகையிலும் அதற்கு ஆதரவு காட்டாமல் காங்கிரஸ் வாதிகள் வகுப்பு ஒற்றுமைக்காக உழைக்க வேண்டிய அவசியத்தை காங்கிரஸ் வற்புறுத்தியிருப்பது இயற்கையே.

பொருளாதார இன்னல்கள் தீர, நாட்டின் வளங்களைப் பெருக்குவதில் முனைவது மட்டும் போதாது. அவற்றை அனைவரும் சமமாக அனுபவிக்க வழி செய்யவும் வேண்டும் என்பதைக் காங்கிரஸ் பூரணமாக உணர்ந்திருக்கிறது. குறிப்பாக ஏழை மக்கள், தொழிலாளரது வாழ்க்கைத்தரம் உயர வகை செய்தாக வேண்டும். ஏற்பாடான நிர்மாண நடவடிக்கைகள் மூலமே இது சாத்தியம். சில கோஷ்டிகள் தங்கள் சொந்த நோக்கங்களை முன்னிட்டு தொழிலாளரை வேறு பாதையில் செலுத்த முற்பட்டிருக்கின்றனர். தொழிலாளர் துன்பங்கள் தீருவது முக்கியமாக பண்ட உற்பத்தி பெருகுவதையும், உற்பத்தியாகும் பண்டங்களின் போக்குவரத்து சீராக நடந்தேறுவதையுமே பொறுத்திருக்கிறது. இந்த உற்பத்திக்கும், போக்குவரத்துக்கும் தீங்கு விளைக்கக்கூடிய காரியம் எதுவும் உண்மையில் தொழிலாளர் நலத்துக்கு எதிரான காரியமே. அது தேசத்துக்குப் பெருந் தீங்கிழைக்கும் செயலுமாகும்.

பாஷாவாரி மாகாணப் பிரிவினைபற்றி ஆராய்ந்து மூன்று மாத காலத்துக்குள் காரியக் கமிட்டியிடம் அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு டாக்டர் பட்டாபி, பண்டித நேரு, ஸர்தார் படேல் இம்மூவரைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமிப்பதென்பது மற்றொரு தீர்மானம்.

ஜெய்ப்பூர் காங்கிரஸில் நிறைவேறிய இன்னும் இரு முக்கியத் தீர்மானங்கள் இந்தியாவிலும், வெளியேயும் நீடித்து வரும் ஏகாதிபத்திய சின்னங்களைப் பொறுத்தவையாகும்.



ராஷ்டிரபதி டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவும் அவரது குடும்பத்தாரும் ஜெய்பூருக்கு வெள்ளி ரதத்தில் அழைத்துச் செல்லப்பட்டபோது எடுத்த படம். (வலது) ஜெய்பூர் காங்கிரஸ் நடந்த காந்தி நகரில் மகாத்மாஜியின் உருவச்சிலையை டாக்டர் பட்டாபி திறந்து வைத்தார்.

ஜெய்பூர் காங்கிரஸில் பண்டித நேரு, மௌலானா ஆஸாத், ஷேக் அப்துல்லா முதலிய தலைவர்கள். பண்டித நேரு தீர்மானமொன்றைப் படித்துக்கொண்டிருக்கிறார்.



மலர்ச்சி

[வை. சுப்ரமண்யம்]

★

"சௌந்தரம், சௌந்தரம், இங்கே சற்று வருகிருயா? முக்கியமாக உள்ளே ஏதாவது செய்துகொண்டிருக்கிருயா?" என்று கேட்டான் வாசுதேவன்.

"இதோ வந்துவிட்டேன்" என்று உடனே பதில் கொடுத்துவிட்டு, இரண்டு நிமிஷங்களில் வாசுதேவன் இருந்த அறைக்குள் வந்தாள் சௌந்தரம்.

வந்து, "என்ன விசேஷம்? முக்கியமான காரியம் என்று ஒன்றுமில்லை; சமையலும் ஆகிவிட்டது. உங்களுக்குச் சாப்பாடு போட வேண்டியதுதான் அடுத்த காரியம்" என்ருள்.

"சரி; சாப்பாட்டைப்பற்றி இப்போது ஒன்றும் எனக்குக் கவலையில்லை. ஒரு கதை எழுதியிருக்கிறேன் அடுத்த இதழுக்காக; உனக்கு இதைப்படித்துக் காட்ட வேண்டும் என்ற ஆசை எனக்கு, வாசிக்கிறேன், கேள்" என்ருன் வாசுதேவன்.

"இது என்ன அதிசயம்? எல்லா கதைகளையும் எழுதிவிட்டு என்னிடம்தான் படித்துக் காண்பித்துக்கொண்டிருந்தீர்களா? இன்றைக்கு என்ன புதுசாக இருக்கிறதே?"

"ஆமாம்: புதுசுதான். இந்த என் செய்கை எப்படி உனக்குப் புதுசு என்று தோன்றுகிறதோ அதேபோல, இந்தக்கதையும் ஒரு புது தினுசாகவே இருக்கிறது எனக்கு. அதனுல்தான் உனக்குப் படித்துக் காட்ட வேண்டும் என்று தோன்றியது."

"அது என்ன அப்படி புது தினுசாக அமைந்திருக்கிறது. உங்கள் கதையை நீங்களே பாராட்டிக் கொள்கிறீர்களே?"

"ஆமாம்; நாம்தான் முதலில் பாராட்டிக்கொள்ள வேண்டும். புது தினுசுதான் இந்தக்கதை. இரண்டு முக்கியமான கதா பாத்திரங்கள் இந்தக் கதையில்..."

"இரண்டு பேரும் காதல் கொள்கிருர்களாக்கும்......"

"அதுதான் இல்லை; அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்தபின் காதல் உதயமாகவில்லை; இன்னும் சொல்லப் போனுல் அவர்களுடைய கல்யாணத்திற்குப் பிறகுதான் அவர்களின் வாழ்க்கையில் காதல் தலைநீட்டுகிறது; மிகவும் இயற்கையுடனே ஒட்டிய பாணியிலாக்கும் என் சிருஷ்டியை அமைத்துள்ளேன்........."

"இல்லாவிட்டால் நம் இருவரையுமேபற்றி எழுதிவிட்டீர்களாக்கும்."

"சே சே; அப்படியில்லை. கதையில் வரும் தம்பதிகள் மிகவும் ஒற்றுமை யுணர்ச்சி உள்ளவர்களாயிற்றே......"

சட்டென்று சௌந்தரம் "அப்படியானுல் நாம் ஒற்றுமையாயில்லாமலிருக்கிறோம் என்பது உங்கள் எண்ணம்; அப்படித்தானே?" என்று குறுக்கிட்டான்.

"அப்படி அர்த்தமாகாது. உண்மையில் நம்மைப் போன்ற ஒற்றுமை அவர்களிடம்கூட இருக்குமா என்பது எனக்குச் சந்தேகம்தான்; இப்போது திருப்திதானே?" என்ருன் வாசுதேவன்.

சௌந்தரத்தின் கன்னங்கள் குழைவு காட்டின; உடம்பை ஒரு முறை நெளித்துக்கொண்டு இரண்டடி முன் வந்து, வாசுதேவன் மேஜையின்மீது இரண்டு கைகளையும் சேர்த்து ஊன்றிக் கொண்டாள். வாசுதேவனின் தோற்றத்தை என்னவோ ஒரு அர்த்தத்துடன் குறிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். கையெழுத்துப்பிரதியைப் புரட்டிப் பார்த்துத் திருப்திப்பட்டுக்கொண்டிருந்தான் வாசுதேவன்.

வாசுதேவனும் சௌந்தரமும் வாழ்கின்ற வாழ்வைக்கொண்டு அவர்களைப்பற்றிச் சர்ச்சை செய்தால், அவர்களைத் தடையில்லாமல் ஒரு ஆதர்ச தம்பதிகள் என்று சொல்லலாம். வாசுதேவன் ஒரு இலட்சியவாதி. வாழ்க்கையில் முரண்பட்ட சந்தர்ப்பங்களையெல்லாம் எதிர்த்துக்கொண்டு, இப்போது இன்பகரமான கட்டத்தில் இருந்தான் என்று சொல்லலாம். சாதாரண எழுத்தாளனுகத் தொடங்கிய இலக்கிய வாழ்வு அவனை ஒரு நண்பனின் முயற்சியின் மூலம் ஒரு வாரப்பத்திரிகையின் ஆசிரியராக்கியது.

சௌந்தரம் வாழ்க்கை வண்டியை சுமுகமாக இயக்கு வதற்கு வாய்ந்த ஒரு சக்கரம் போன்றவள். மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் வாழ்க்கை யின் பிடிப்பாகக் கொண்டு அந்த உணர்ச்சிகளிலே எப்படி யாவது வாசுதேவனையும் ஈடுபடுத்தி வருவாள் அடிக்கடி. இளம்பிராயத்தில் சாதாரண மாகப் பத்திரிகைகளில் அவ ளுக்குச் சிரத்தை அதிகம். பத்தி ரிகைகளையும், எழுத்தாளர் களையும், இரண்டையும் தாண் டிப் பத்திரிகாசிரியர்களையும் பற்றி மனதில் நினைக்கும் போதெல்லாம் அவளுக்கு ஏதோ பெருமையாக இருக் கும். எழுத்தாளர்களையும், பத்திரிகாசிரியர்களையும் சாதாரண மனிதவகுப்புகளி னின்றும் வேருகப் பிரித்து அவர்களுக்கு ஏதோ உயரிய ஸ்தானங்கள் அளிக்க வேண்டும் என்று தோன்றும் அவளுக்கு.

கல்யாணத்திற்கு முன்பே அவ ளுடைய மனப்பான்மை இப்படி யென்ருல், வாசுதேவனை—ஒரு வாரப்பத்திரிகையின் ஆசிரியரை-கல்யாணம் செய்துகொண்டு விட்டபிறகு கேட்கவேண்டுமா?

* * * *

"கதையைப் படிக்கிறேன், சௌந்தரம்; உனக்கு என்னை ஏதாவது கேட்க வேண் டும்போலிருந்தால், எல்லாம் கடைசியில் கேள். நடுவில் நடுவில் கேட்கக்கூடாது." என்று பீடிகை போட்டுக்கொண்டு தன் கதை யைப் படிப்பதற்கு ஆயத்தம் பண்ணினுன் வாசுதேவன்.

"சரி: கட்டளையை சிரமேற் கொள்கிறேன்" என்று சொல்லிப் புன்னகை புரிந்தாள் சௌந் தரம்.

"படிக்கிறேன்; கேள்.

1922-ம் வருஷம். மகாத்மா காந்தியடிகளின்ஒத்துழையாமை இயக்கம் நடந்துகொண்டிருந்த காலம்.

திருச்சி கலாசாலையில் மேற்படி இயக்கத்தின் எதிரொலிபோலப் பல மாணவர்கள் அரசியலில் சிரத்தைகொண்டு தலைவர்களின் ஆதரவில் பல பொதுக்கூட்டங் கள நடத்த முற்பட்டார்கள். தங்கள் தங்கள் கலாசாலைகளில் தேசியப் பிரசாரம் செய்யத் தொடங்கினர்.

["ஏன்னு, நீங்கள் வாசித்தது திருச்சி கலாசாலையில்தானே? எனக்கு மறந்து போய்விட்டது.'' என்று சந்தேகத்தை விளக்கிக் சொல்லிக் கேட்டாள் சௌந்தரம்.

"ச்சு நடுவில் பேசாதே என்று சொன்னேனு இல்லையா, சௌந் தரம்?......ஆமாம். திருச்சியிலும், அதற்கு முன்னுல் கும்பகோணத் திலும் வாசித்தேன். கதையை கவனமாகக் கேள்......'' என்று தொடங்கினுன் வாசுதேவன்.]

"கலாசாலையில் பிரதான புரு ஷர்களாய், கலாசாலையின் இரண்டு கண்கள் போலவே விளங்கிய இரண்டு மாணவர்கள் இருந் தனர். அவர்கள் தான் தியாகு வும், ரகுநாதனும். இவர்கள் இருவருக்கும் இந்தத் தேசிய இயக் கத்தில் அசாதாரணமான சிரத்தை விழுந்தது. இயக்கத் தில் ஈடுபாடுகொள்ள நினைத்த மற்ற மாணவர்கள் ஒரு முகமாகத் தேர்ந்தெடுத்த தலைவர்கள் இந்த தியாகுவும், ரகுநாதனும்.

தேசம் பூராவிலும் மகாத்மா வின் இயக்கம் வெற்றியடைந்து கொண்டிருந்தது.

ரகுநாதனும், தியாகுவும் கலா சாலையைப் பகிஷ்கரித்தனர்.

நகரத்தில் நடந்த பொதுக்கூட் டத்தில் தடை யுத்தரவை மீறிப் பேசினர் தியாகுவும், ரகுநாதனும். இதன் முடிவு? இருவருக்கும் மூன்றுமாத காலம் சிறைவாசம்.

மாபெரும் புயற்காற்றை எதிர்த் துப் போராடியது போன்றும்,

அந்த அயர்ச்சியில் உடலின் சக்தி தணிந்தது போன்றும் உணர்ந்தனர் தியாகுவும், ரகு நாதனும் சிறைச்சாலையில்.

காலம் சென்றுகொண்டிருந் தது.

ரகுநாதன் தீவிரவாதி; ஆனல் வாழ்க்கையை எப்படிக் கழிப்பது என்ற பிரச்னை சிறையை விட்டு வெளியேறிய தும் ஏற்பட்டால், அவனுல் சுலபமாக அதைத் தீர்த்துக் கொள்ள முடியாது.........

["சித்தே இருங்கோ. எங்க பிறந்தகத்தில் சொல்லியிருக் கிருர்கள் உங்களுக்கும் இந்தக் காங்கிரஸ் பைத்தியம் உண் டென்று. நீங்ககூட ஜெயிலுக் குப் போவதாக இருந்தீர் களாமே. நீங்க ஜெயி லுக்குப்போகாவிடில் தேசத் துக்கு சுதந்திரமே வராதுபோய் விடும் என்று நினைத்தீர்களா ?'' என்று கேட்டாள் சௌந்தரம்.

"இந்தா சௌந்தரம், உன் சுபா வம் உன்னை விடாதுபோல இருக் கிறதே! குறுக்கே ஒன்றும் பேசாதே என்ருல்......நான்தான் ஜெயிலுக்குப் போகவில்லையே... அப்புறம் என்ன?"

"ஜெயிலுக்குப் போனவராக மட்டும் இருந்திருக்க வேண்டும் நீங்கள்.........''

"ஏன், அப்படியிருந்தால் என்ன செய்வாய் ?

உங்களைக் கல்யாணமே பண் ணிக் கொண்டிருந் திருக்கமாட் டேன்."

"போகிறது. நீ என்னைக் கல் யாணம் பண்ணிக்கொண்டுவிடப் போகிருய் என்பது தெரிந்திருந் தாலாவது,நான்கட்டாயம் ஜெயி லுக்குப் போயிருப்பேனே!.''

"என்ன ?'' என்று அதட்டிக் கேட்டாள் சௌந்தரம். பதில் ஒன்றும் பேசாமல் படிக்கத் தொடங்கிவிட்டான் வாசு தேவன்.]

அந்தப்பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள ரகுநாதனுல்முடியாது. தியாகுதான் மேற்படி பிரச்னை யையும் சரி,மற்றஇந்தப்பிரச்னை யையும் தீர்த்துவைக்கவேண்டிய வன்.

இரண்டுபேரும்சாதாரணமாக கலாசாலையில்அறிமுகமான நண் பர்களல்ல; பால்ய சிநேகிதர்கள்

ஒருவர் இன்பத்திலும் துன்பத்திலும் மற்றவர் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய நிலையில் ஆதி காலம் தொட்டுப் பழகியவர்கள். அவர்கள் பழகியது சம்பந்தப்பட்ட வரையில் அந்தஸ்து என்ற வார்த்தைக்கே இடமில்லை: ஆனால், உண்மையை ஆராயப்போனால் தியாகுவுக்கும், ரகுநாதனுக்கும் மலைக்கும் மடுவுக்கும்போல. ரகுநாதன் எளிய நிலைமையில் இருந்தான்.

ஆனால் அவன் ஒரு லட்சியவாதி. பணம் என்ற விஷயத்துடன் தொடர்புகொண்ட வாழ்க்கையைப்பற்றிக் கவலைப்படுபவனே அல்ல அவன். அந்த விஷயத்தை மறந்து சாதாரணமாகவே வாழ்வதன் மூலம் தன் லட்சியங்களை நெருங்க முடியும் என்று நம்பினான். இந்த முறையில் தன் லட்சியங்களையும், கொள்கைகளையும் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தவும், அவைகளுக்கு இருப்பிடமாக இருந்த தன்னை ஒரு ஆதர்ச புருஷன் என்பதாக எல்லோரும் மதிக்கும்படி செய்யவும் ஆசைகொண்டான் அவன்.

தியாகுவுக்கு அவனுடைய ஆசைகளும் லட்சியங்களும் தெரியும். உலகத்தில் ஒரு பந்தமுமில்லாமல் நாடோடி வாழ்க்கையில் நாட்களைக் கழித்துவிட விரும்பிய ரகுநாதனுக்குத்தான் செய்ய வேண்டிய கடமையைப்பற்றி அடிக்கடி நினைத்துப் பார்ப்பான் தியாகு. அந்தக் கடமையை எந்த விதத்தில் செய்வது?

ரகுநாதனுடைய ஆசைகளும் லட்சியங்களும் பூர்த்திபெறும் வண்ணம் அவனுக்கு உதவவேண்டும். பொருள் வசதியுள்ள தியாகுவினால் அது சாத்தியமாகும், உன்னத லட்சியம் இருக்கிறது: லட்சியத்தை அடைய ஆசை இருக்கிறது. இவை நிறைவேறப் பொருள் இருக்கிறது!

இன்னும் என்ன? ரகுநாதன் பாக்கியசாலிதான்! தியாகுவும் பாக்கியசாலி; நண்பனுக்கு உதவி செய்வதால்.

கலாசாலையிலேயே எழுத்துப் பித்துப் பிடித்து அலைந்தவன் ரகுநாதன். திரத் தெளிந்த கற்பனைகளைக் கொண்டு உருவாகும் அமர சிருஷ்டிகளேபோன்று சில கதைகள்! அரசியல், பொருளாதாரம் இவைகளில் தன் அழுத்தமான கருத்துக்களைப் பரவவிட்ட கட்டுரைகள்! இப்படிச் சில எழுதித் தன் ஆத்ம திருப்திக்கு ஈடு செய்து வந்தான்.

இந்த சாதாரண லட்சியங்கள் தவிர, அவன் உள்ளத்தில் வேரோடு ஆட்டி அசைக்க முடியாதிருந்த இன்னொரு ஆசை பத்திரிகையாசிரியனாகிவிட வேண்டுமென்பது!"

[சௌந்தரம் தன் முகத்தில் ஏதோ புதிருக்கு விடை கண்டு பிடிக்கும் பாவனையை வருவித்துக் கொண்டு கதையைக் கூர்ந்து கேட்டாள்]

"அரசியல் வாழ்க்கையின் எதிரொலியான சிறை வாழ்க்கைக்குப் பிறகு இரு நண்பர்களும் சென்னைக்கு வந்து விட்டனர்.

ரகுநாதனின் லட்சியங்களுக்கேற்ற இடம் அது. அவனுடைய லட்சியப் பாதையிலே பிரயாணம் செய்துகொண்டிருந்தான் அவன், தியாகுவின் மனதில் ரகுநாதனின் எதிர் கால வாழ்க்கை ஒரு திரைப் படமாக ஓடியது.............

தியாகு தீர்மானம் செய்து எழுந்தான். ரகுநாதனுக்கு உண்மையான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்து விட்டுத்தான் அகல வேண்டும் என்பதாகத்தான் தீர்மானித்தான்.

ரகுநாதனுக்குக் கல்யாணம் செய்து வைப்பதை முதல் காரியமாகக் கருதினான்.

தியாகுவின் இந்தக் காரியம் ரகுநாதன் மனதில் ஒன்றும் கிளர்ச்சியை மூட்டி விடவில்லை. ஆனாலும், இது சம்பந்தமான ஒரு விநாடியில்—அல்லது அதற்கும் குறைவான நேரத்தில்—ஏற்பட்ட சிந்தனையில் ஒரு உன்னதமான முடிவை ஏற்படுத்திக்கொண்டு விட்டான் அவன்!

சம்பிரதாயப்படி பார்த்துக் கொண்டிருந்தால் சரிப்பட்டு வராது என்று நினைத்துத்தான் தியாகு தனக்குத் தெரிந்த நண்பர்களிடத்தில் ரகுநாதனுக்குப்பெண் கேட்டான்!

அவனுடைய முயற்சி பலித்தது! ரகுநாதனுடைய கல்யாணத்திற்கு நாள்தான் நிச்சயிக்க வேண்டும்......!

தியாகுவின் கட்டளையின்பேரில் ரகுநாதன் பெண்ணைப் பார்க்கச் சென்றிருந்தான்,

அந்த வைபவத்தை எப்படி விவரிப்பது? ரகுநாதனின் கவனம் இதுவரை இந்த நிகழ்ச்சிகளிலே லயிக்கவில்லை. ஆனால், தன்னை வந்து நமஸ்கரித்து விட்டு எழுந்து நின்ற அந்தப் பெண்ணின் தோற்றத்தை—அதன் பிறகு தற்செயலாய் ஒளி வீசிய அந்தக் கண்களைப்பார்த்த பிறகு—அவனால் இன்னும் சாதாரணத் தன்மையை மேற்கொண்டிருக்க முடியவில்லை. இயற்கையிலேயே உள்ளது போலும்; அவளுடைய கன்னங்களில் கண்ட குழைவைப் பார்த்த பிறகு அவன் கண்கள் தாமாகவே விரிந்து கொண்டன. விரிந்த கண்களின் தீட்சண்யப் பார்வை அவளுடைய கண்களை, மீண்டும் நோக்கின. அவள் தலை குனிந்தது.........!

["அடுப்பைத் தணிக்கவேயில்லைபோல் இருக்கிறதே.........
......என்று போய்........எழுந்து கொண்டே சௌந்தரம் சொன்ன போது, கனத்த கோபத்துடன் வாசுதேவன் படிப்பதைச் சட்டென்று நிறுத்தித் தலை நிமிர்ந்தான்," "சௌந்தரம். உனக்குத்தான். ரசிகத் தன்மையைக் கடவுள் கொடுத்திருக்கிறானே? ஏன் இப்படி......?" என்று ஆரம்பித்த போது, "அதில்லை; நீங்கள் கோபித்துக்கொள்ளாதீர்கள். இந்தக் கதை முற்றிலும் நம்மைப் போன்றிருக்கிறது...அதனால்..."

"சே சே: இது என்ன பைத்தியம்? உங்க அப்பா என்ன தாசில்தாராகவாயிருந்தார்? இது எங்கேயாவது பொருந்துகிறதா?"

"அப்படியில்லாத போனால்? அது கற்பனையாக இருக்கலாம்......யாரோ ஒரு நண்பர் வந்து தானே உங்களுக்காக என்னைப் பெண் கேட்டார் என்தகப்பனாரிடம்..."

"அதெல்லாமில்லை; இது கற்பனைக் கதையம்மா, கேள்..."

கல்யாணத்திற்கு நாள் குறிக்கும் காரியங்களிலே தியாகு மும்முரமாக ஈடுபட்டிருந்தபோது, ரகுநாதன் தன் சிந்தனையை மனோராஜ்யத்தில் ஈடுபடுத்தியிருந்தான். கடலை நோக்கியிருந்தன அவன் கண்கள். அந்தக்கண்கள் அன்று கண்ட அனுபவத்தையே தன்முன் எப்போதும் நிர்மாணித்து பார்க்க முற்பட்டன. கடல் அலைகளின் அமர்க்களத்திற்கு நடுவே, ஜல

மட்டத்திற்கு மேலே அந்தப் பரந்த நீல மயமான வெளியில் பெரிதாக, பிரம்மாண்டமாக அன்று பார்த்த அந்தப் பெண்ணின் தோற்றத்தை அந்தப் பாவனையிலேயே-உணர்ச்சியுடனேயே— தத்ரூபமாக நிர்மாணித்துப் பார்க்கும் இன்பகரமான காரியத்தில் ஊன்றிப்போய் மெய்ம் மறந்திருந்தான் ரகுநாதன்.



காலம் சென்றுகொண்டிருந்தது.

....

ரகுநாதன், தலையில் பேரிடி விழுந்தாற்போல அந்தச் செய்தியைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்தான்; "தன் பெண்ணுக்குப் பார்த்திருக்கும் 'வரனுக்'கு ஒன்றும் வேலையில்லையென்று தெரிந்ததும் அந்த ரிடையர்ட் தாசில்தார் தன் பெண்ணை அவனுக்குக் கொடுக்கச் சம்மதிக்கவில்லையென்று சொன்னாராம். தியாகுவும் அசந்துவிட்டான்.

இந்த செய்தி கிடைத்த பின் எல்லோர் மனதிலும் பல விதமான உணர்ச்சிகள். ரகுநாதனால் தாளவே முடியவில்லை. கல்யாணத்தைப்பற்றிய நினைவே இல்லை அவனுக்கு. முதலில், சந்தர்ப்பங்கள் மனதில் அந்த உணர்ச்சியைத் தூண்டிவிட்டன.

இப்போது.........

அந்தப் பெண்ணின் நிலைமை எப்படியிருக்கும் ?......

[மேஜை மீதிருந்த கண்ணாடி 'பேப்பர் வெயிட்'டினின்றும் கை விரலில் ஒரு திவலை நீர் தெளித்த மாதிரியிருக்கவே, நிமிர்ந்து பார்த்தான் வாசுதேவன். சௌந்தரத்தின் கண்களினின்றும் கண்ணீர் வடிந்து 'பேப்பர் வயிட்'டின் மீது உதிர்ந்து கொண்டிருந்தது.

"என்ன சௌந்தரம்? என்றான் வாசுதேவன்.

"இந்தக் கதை நம்மைப்பற்றித் தான் எழுதியிருக்கிறீர்கள். அன்று எனக்கு இருந்த நிலைமையை இன்று நீங்கள் நன்றாக நினைவு மூட்டி விட்டீர்கள்..." என்று தேம்பினாள்.

"அதனால் என்ன? அழுவானேன்?" என்றான் வாசுதேவன்.

"எங்கே, நான் அழவில்லையே?" என்று இரு கைகளாலும் கண்களைத் துடைத்துக்கொண்டு மீண்டும் புன்னகை புரிந்தாள் சௌந்தரம். பிறகு "நீங்கள் இனிமேல் கதையைப் படிக்க வேண்டாம்... சும்மா சுருக்கமாகச் சொல்லி விடுங்கள்......"என்றாள்.

"அப்புறம் என்ன கதை? உன் தகப்பனார் அப்படி ஒரேயடியாய்ப் புளியங்கொம்பைப் பிடிக்கவே தியாகு பார்த்தான்; தன் பொருளில் பெரும்பாகம் முதலாகப் போட்டு இந்தப்பத்திரிகை ஆபீஸைத் திறந்தான். அதில் ரகுநாதனாகிய இந்த வாசுதேவன் தான் ஆசிரியர். இந்தச் சேதியைக் கேட்டாரோ இல்லையோ ரிடையர்ட்......உன் தகப்பனார்..... உடனே என்னை வந்து என் கழுத்தில் மாட்டிவிட்டார். அவ்வளவு தான் குடித்தனம் பண்ணிக் கொண்டிருக்கிறோம்..." என்று முடித்தான் வாசுதேவன்.

"இந்தக் கதையில் காதல்கூட வருகிறது என்கிறீர்களே. அது எங்கே?"

"அதுவும்இருக்கிறது: நான் படிக்கவில்லை"

"நம் வாழ்க்கையில் அப்படியெல்லாம் தான் இல்லையே..."

"அப்படிச் சொல்லாதே, சௌந்தரம்! உனக்கு என் மீது இருக்கும் காதலைப்பற்றி இன்று நான் ஒன்றும் சொல்ல வேண்டாம்... இதோ என் பெட்டியினடியில் இருக்கின்றன சில கடிதங்கள். உன் திருக்கரத்தால் எழுதப்பட்டவை...... அவைகளை எடுக்கிறேன்......"

"வேண்டாம்; வேண்டாம், உங்கள் மீது எனக்குக் காதல் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது......ஆமாம். நீங்கள் அப்படியானால் உண்மையாக ஜெயிலுக்குப் போயிருக்கிறீர்களா?

"பேஷாக!"

"அப்படியானால் சரிதான்; எங்கே கோழையாய் இருந்திருப்பீர்களோ என்று நினைத்தேன்..."

"ஆனால் உண்மை தெரிந்தால் நீ என்னைக் கல்யாணமே செய்து கொள்ளமாட்டேன் என்றாயே..."

"இப்போதுதான் உண்மை தெரிந்து போய்விட்டதல்லவா? இனிமேல் உங்களை நான் வாஸ்தவமாகக் கல்யாணம் செய்துகொள்ளப்போவதில்லையே......" என்று சிரித்தாள் சௌந்தரம்.

"நீ கெட்டிக்காரிதான் சௌந்தரம் உண்மையில்" என்று அவள் கன்னத்தில் ஆள்காட்டி விரலால் தட்டினான் வாசுதேவன்.

அவள் முகத்தில் தாமரை மலர்வதுபோன்ற ஒரு மலர்ச்சி உருப்பெற்றுக்கொண்டிருந்தது!

ஞானவில் ஸ்ரீ ராஜமாணிக்கம்

...நீலம்...

ஒருவருடைய திறமை, மேதை, சாதுரியம், இவற்றைப் புகழ்ந்துகொண்டாடும்போது சாதாரணமாக நாம் "அவரா? அடேயப்பா! வில்லாதி வில்லனுச்சே!" என்கிறோம். "வானத்தை வில்லாக வளைக்கும் சூரன்!" என்று பாராட்டுகிறோம். ஸௌந்தர்ய, ரூபலாவண்யத்தை வர்ணிக்கும்போதோ "வில்லினை ஒத்த புருவம்!" என்று புருவத்துக்கு வில்லை உவமை கூறுகிறோம்.

எந்த ஒரு விஷயத்தில் விசேஷமான யோக்யதையும், பாண்டித்தியமும் அடைந்தவரானுலும் அவரை 'வில்லன்' என்ற ஒரு அடைமொழியையும்கூடவே சேர்த்துக்கொண்டு போற்றிப் பேசுவது தமிழர் வழக்கம். இதிலிருந்து ஒரு உண்மை புலப்படுகிறது. வில் வித்தையில் பெறும் தேர்ச்சி மிக்க உயர்வானது; ஒப்பிட்டு உவமை கூறத்தக்க ஒரு லட்சியப் பயிற்சி என்பதே காரணம். ஆகவேதான் இதர துறைகளில் எய்தும் திறமையைக்கூட 'வில்'லுடன் ஒப்பிடுகிருர்கள்போலும்!

இயற்கை எழிலை எடுத்துக்கொண்டாலும் இந்த "வில்" முக்கியமான ஸ்தானத்தைத்தான் வகிக்கிறது. வான வில்லும், அதில் வளைந்து ஓடும் வர்ண ஜாலங்களும் கவிஞர்களை மட்டுமின்றி சாதாரணமானவர்களையும் கவர்ந்து விடுகின்றன. இவ்வாறு இயற்கை, வீரம், திறமை, மேதை, ஸௌந்தர்யம் முதலிய ஒவ்வொரு அம்சத்திலும் எடுத்துக்காட்டாக விளங்கும் இதே 'வில்' இசைத் துறையிலும் விடுபடவில்லை. இங்கு ஞானத்தில் வில்லர்கள்; கானத்தில் வில்லர்கள்; வாத்தியங்களில் வில்லர்கள் என்று பல வகை. வாத்திய வில்லர்களில் கும்பகோணம் பிடில், ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள் முதல் வரிசையைச் சேர்ந்தவர்.

கண்களுக்கினிய வர்ண விசேஷங்களை வான வில்லின் மூலம் காண முடிவதுபோலவே, ஸங்கீதத்தின் ஸப்தஸ்வரங்களின் பூரிப்பை ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை தமது 'வில்'லில் நாணேற்றி இயக்குவதிலிருந்து செவியுற முடியும். ஞானத்தை வில்லாக வளைத்துக்கொண்டு வாசிக்கும் நிபுணர் கோஷ்டியைச்சேர்ந்தவர் இவர். இந்த வருஷம் நடைபெறும் ஸங்கீத வித்வத் ஸபையின் 23-வது மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கிருர். ஐம்பது வயதாகி பொன்விழா பூர்த்தியடைந்து 'ஸங்கீத கலாநிதி' என்ற பட்டத்தைத் தாங்கப்போகும் இச்சந்தர்ப்பத்தில் அவருடைய ஸங்கீத வாழ்க்கையைப்பற்றிக் குறிப்பிடுவது பொருந்தும்.

* * * *

ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளை கும்பகோணத்தில், விளம்பி வருஷம், ஆடிமாதம் 22-ந் தேதி [1898-ஆகஸ்ட் மாதம் 5-ந்தேதி] பிறந்தவர். இசை வேளாளர் வகுப்பைச் சேர்ந்த இவரது குடும்பம், ஸங்கீதத்தில் பெயர் பெற்றது. டவுன் ஹைஸ்கூலில் 3-வது பாரம் வரையில் படித்தார். ஸங்கீத வித்தியாரம்பம் 9-வது வயதில் நடைபெற்றது. இவரது வாசஸ்தலத்துக்கு எதிரேயிருந்த ஸ்ரீ கந்தஸ்வாமிப் பிள்ளை என்பவர் இவருக்கு முதல் குரு. ஆரம்பத்தில் அப்பியாசித்தது வாய்ப்பாட்டு. பூர்வாங்கமான பயிற்சி முடிந்ததும் திருவிசைநல்லூர் ஸ்ரீ நாராயண ஸ்வாமி ஐயர், கும்பகோணத்தையடுத்த பந்தணைநல்லூர் ஸ்ரீ. சின்னையாப்பிள்ளை முதலியவர்களிடம் சென்று வாய்ப்பாட்டிலேயே தொடர்ந்து பயிற்சி பெற்ருர். வாய்ப்பாட்டில் போதிய அப்பியாஸம் பெற்ற பின்னர் பிடில் பயிற்சியில் கவனத்தைச் செலுத்தினர். இந்த வாத்தியத்தைப்பற்றி இங்கு ஓரிரு விஷயங்களைச் சுருக்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

இன்று ஸங்கீத மேடையில் மிக முக்கியமாக விளங்கும் பிடில் நம் நாட்டுக்குப் புதிது. ஆனால் தந்தியில் இயங்கும் வாத்தியங்கள் நமக்குப் புதிதல்ல. மிகவும் தொன்மையாகவும் தெய்விகத்வமும் வாய்ந்த வீணை நமது ஸங்கீதத்துக்கே அடிப்படை இசைக்கருவியாக அன்றும் மிளிர்ந்தது; இன்றும் மிளிருகிறது. இவ்வாத்தியத்தை இணையற்ற விதமாகக் கையாண்ட விற்பன்னர் எவ்வளவோ பேர்களை ஸங்கீத உலகம் அறியும். இந்தச் சிறப்புடனின்றி, இதர நாடுகளிலுள்ள கலைகளாகட்டும்;

வாத்தியங்களாகட்டும்; ஆழ்ந்த அறிவைச் செலுத்தி அவற்றையெல்லாம் தமதாக்கிக் கொண்டு பிரமிக்கத்தக்க பாண்டித்தியத்தை அடையும் மேதை நம் நாட்டினருக்குப் பிரத்யேகம். வடநாட்டில் தந்தியில் அமைந்த வாத்தியங்கள் பலவிருக்கின்றன. ஸாரங்கியும் அதைப்போலுள்ள இன்னும் அநேக இசைக் கருவிகளும் அங்கு பிராபல்யமடைந்திருக்கின்றன. ஸலவைக்கல்கொண்டு தந்தியில் இழைத்தால் நாத வெள்ளம் பொங்கி வழியும்படியாகவுள்ள கோட்டுவாத்தியம் நமக்கு நன்கு பரிச்சயமானது. இதர துறைகளில் உள்ளதைப்போலவே பிடில் வாத்தியத்திலும் தென்னிந்தியாவுக்குக் கிட்டியிருக்கும் கியாதி ஒப்பற்றதாகவேயிருக்கிறது. இதில் அமோகமான புலமையைப் பெற்று வாழ்ந்த பெரியார்கள் பலருண்டு. ஆனுல் திருக்கோடிகாவல் பிடில் வித்வான் ஸ்ரீ. கிருஷ்ணய்யர் அவர்கள் நாளில் இந்த வாத்தியத்துக்கு ஏற்பட்ட 'மவுஸ்' அலாதியானது. இதன் சிறப்பு பிராபல்யமடைந்து எங்கும் பரிமளிக்க அவருடைய ஞானபாவமான வாசிப்பு பெரிதும் காரணம். காலஞ்சென்ற ஸ்ரீ. கோவிந்தஸ்வாமிப் பிள்ளை பிடிலில் சுகநாதம் சொட்டும்படி செய்து, நிகரற்ற பெரும் புகழை நிலைநாட்டியவர். அத்தகையோரின் வழியை அனுசரித்து பிடில் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் சிலர் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகிருர்கள்.

ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளையின் பிடில் அப்பியாசமும் குரு சிஷ்ய பரம்பரையிலேயே நடந்தேறியிருக்கிறது. வாய்ப்பாட்டுப் பயிற்சியையடுத்து, திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையரின் சிஷ்யர் ஸ்ரீ ராமஸ்வாமி ஐயரிடம் இவர் பிடில் பயிற்சி பெறப் புகுந்தார். சுமார் 4, 5 வருஷ காலம்வரை இங்கு குருகுல வாஸம் நடந்தது. ஸங்கீதத்தில் இவர் பரிபூரணமான யோக்கியதையை தேடிக்கொண்ட சமயமும் இதுவே. ஞானம் விசாலப்படுவதற்கு உதவியாக நிறைந்த கேள்வியும் கூடச் சேர்ந்தது. பின்னர் உமையாள்புரம் ஸ்ரீ ஸ்வாமிநாதய்யரிடம்சென்று பிரபல வாக்கேயகாரர்களின் கீர்த்தனைகளைக் கற்று சாதகப்படுத்திக் கொண்டார். நாமக்கல் வித்வான் ஸ்ரீநரசிம்ம ஐயங்கார் அவர்களிடம் பாடம் கற்கும் வசதியையும்பெற்றுப் பயனடைந்தார். கும்பகோணம் புல்லாங்குழல் வித்வான் ஸ்ரீமான் நாகராஜராவ் அவர்களிடமும் இவருக்கு அப்பியாசம் உண்டு. இவ்வளவு பயற்சியும், பாடாந்தரமும் வலுவான ஞான வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தன. சுமார் 10 வருஷங்கள் இவ்வாறு இடைவிடாத அப்பியாசத்தாலும்' சாதகத்தினுலும் பிடிலில்

தேர்ச்சியைப்பெற்ற இவர், குடந்தையருகே பல இடங்களில் கச்சேரிகளுக்கு வாசித்து வந்தாரென்றுலும் 1913-ம் ஆண்டில்தான் இவருடைய முதல் கச்சேரி தொழில் முறையில் துவங்கியதென வேண்டும். ஆண்டிப்பட்டி ஜமீனில் ஆலய உற்சவம் நடந்த சமயம் அது. ஆலங்குடி வித்வான் நடேசய்யர் என்பவருடைய கச்சேரி அங்கு நடந்தபோது, இவர் பக்கவாத்தியம் வாசித்து பெருவாரியான புகழுக்குப் பாத்திரமானுர். இவர் திறமையை மெச்சி, காலஞ்சென்ற காயக சிகாமணி முத்தைய பாகவதர் அவர்கள் கையினுல் சன்மானிக்கப்பட்டார். இதற்குப் பிறகு பிரபல வித்வான்கள் கச்சேரி பலவற்றிற்கு இவர் பக்க வாத்தியம் வாசித்திருக்கிருர். காயகசிகாமணி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார் கச்சேரிகள் செய்ய தலைப்பட்டதிலிருந்து அவருக்குத் தொடர்ந்து பல இடங்களில் பக்க வாத்தியமாயிருந்திருக்கிருர்.

ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளை, ஸங்கீதஸம்பிரதாயம் நன்கு தெரிந்தவர். பூர்வீகத்தில் பிடில் வாசிப்பின் லட்சணம் எப்படியிருந்ததோ, அதை அனுசரித்து பிடிலை ஆளுபவர். அதே அமைப்பை இன்றும் தாங்கிவருபவர். துல்லியமான சுருதி, ஸ்வர நிர்ணய நுணுக்கம், கனம், நயம், இவையெல்லாம் இவருடைய வாத்தியத்தில் தெள்ளெனத் துலங்கும் விசேஷ அம்சங்கள். மூன்று ஸ்தாயிகளிலும், காலங்களிலும் புஷ்டியாயும், தெளிவாகவும், திட்டமாகவும் இழைத்து வாசிக்கும் மழமழப்பான கை. சம சுருதியிலேயே வாசிக்கும் இயல்பு இன்னொரு விசேஷமாகும். எவ்வளவு குறைந்த சுருதியாக விருந்தபோதிலும் சம சுருதியிலேயே வாசிப்பதை அனுபவத்துக்குக் கொண்டு வந்தவர். பிடிலில் வாசிப்பதற்கு எவ்வளவோ வசதிகளிருக்கின்றனவென்றுலும், பக்கவாத்தியம் வாசிக்கிறேம் என்பதை மனதில் கொண்டு பாட்டு மாதிரி வாசிக்கவேண்டும் என்ற விருப்பமிக்கவர் இவர். கச்சேரிகளில் பாடகருக்கு அனுசரணையாகவிருக்க வேண்டுமென்ற அடிப்படையை நழுவவிடாமல் அதையே லட்சியமாக மதிப்பவர். பாடகருக்குத் தக்க உதவியாக வாசிப்பதிலேயே நோட்டம்

கொண்டு ராக ஆலாபனையானாலும், ஸ்வர விந்நியாசமானாலும் ஒரு அளவுக்குக் கட்டுப்பட்டு அயர்ச்சி தட்டாமல், இனிமையும் கவர்ச்சியும் வெளிப்பட வாசிக்கும் நேர்மை உள்ளவர். ஸ்வரங்கள் சிதைவுறாமல், கமக விசேஷத்தோடு வாசிப்பதில் வல்லவர். இத்தோடு பாடகர் கல்யாணி, தோடி, பைரவி, சங்கராபரணம் முதலிய எந்த கன ராகத்தை ஆலாபனை செய்தாலும், அதை அனுசரித்து தடுக்காமலும், இடைஞ்சலின்றியும்கூட வாசிப்பதுடன், தனியாகப் பாடகரை யடுத்து வாசிக்கையில் தமது சொந்தமான பாணியை ஓரிரு இடங்களில் பதியும்படி செய்யும் நாஸுக்கான, நாகரிகமான முறை இவரிடம் குறிப்பிடத்தக்கதாகும். சம்பிரதாயமாகவும், பாரம்பர்யமாகவும் அனுஷ்டானத்தில் வந்துள்ள ராகங்கள் அனைத்திலும் ஒரே சீரான பற்றுதல் கொண்டவர்.

ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளையின் வாசிப்பில் ஜீவனிருக்கிறது. பூரிப்பும், மென்மையும், கர்நாடக சுத்தமும் விசேஷமாக விளங்குவதற்கு அவருடைய நீண்ட அனுபவம் முக்கிய காரணம். பிராபல்யமடைந்துள்ள பாடகர் ஒவ்வொருவருக்கும் அவர் பக்க வாத்தியம் வாசித்திருக்கிறார். எனவே ஒவ்வொருவர் பாட்டிலுள்ள விசேஷ நோட்டங்களையும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு "இந்தப்பாட்டுக்கென்றே பிரத்யேகமாக அமைந்த பிடிலோ!" என்று பிரமிக்கும் படியான பக்குவம் அவர் கையில் நன்கு படிந்து போயிருக்கிறது. பாடகர் பாடுவதுபோல் உள்ள நாதம் பிடிலில் பிரதிபலிக்க வேண்டுமானால் பிடில் அப்பியாசத்துக்குமுன் வாய்ப் பாட்டு அப்பியாஸிக்க வேண்டும். இதற்குச் சாரீரம் குயில் மாதிரி இருக்க வேண்டுமென்பதில்லை. மனித உதவுபடிகளும், சாரீரத்தில் அமைந்திருக்கவேண்டிய சகல பேச்சுக்களும் வாத்தியத்தில் ஒலிக்க வேண்டுமானால், பிடில் பயிலுமுன் வாய்ப்பாட்டு அப்பியாசம் அத்தியாவசியம். இதையறிந்தே முதலில் பாட்டில் பயிற்சி பெற்றவர் ஸ்ரீ பிள்ளை. 'தாட்டி'யாகவும், விறு விறுப்பாகவும் நிரவல் விளங்குவதற்கும், ரஸானுபவம் கெடாமல், வாசிப்பில் களை சொட்டும்படி செய்வதற்கும் இவர் பின்பற்றி வந்திருக்கும் வழி பத்திரமானது.

ஞானத்தில் கொழுத்த ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளை பழக்கத்துக்குப் பாத்திரமானவர். எந்த நேரத்திலும் புன்னகை பூத்தவண்ணமிருப்பார். மரியாதையும் அடக்கமும் முன்னணியில் நிற்கும். ஸங்கீத வித்வான்களிடம் சகஜமாக சம்பாஷணை காலத்தில் வெளிப்படும் ஹாஸ்யச்சுவையை இவரிடத்தும் காணலாம். ஸங்கீதத்தைப் போலவே 'இங்கித'மும் தெரிந்தவர். தெய்வ பக்தி மிக்கவர். தேசபக்தி நிறைந்தவர். தஞ்சை ஜில்லாவில் ஸ்ரீமான் பந்துலு ஐயர் பிரபலமாகக் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு சேவை செய்த நாளிலிருந்து கதர் உடுத்துவதையும், தேசத்துக்காக நடக்கும் நல்ல காரியங்களில் ஈடுபாடு கொள்வதையும் வழக்கமாக்கிக்கொண்டார். தமிழ் பத்திரிகை படிக்கத் தவறுதவர். குடந்தையில் இசை வேளாளர் சங்கத்தை ஸ்தாபித்து 10-வருஷ காலமாக அதன் தலைவராயிருந்து வருகிறார்.

1933-ம் வருஷம் கும்பகோணத்தில் நடந்த மகாமகம் அ. இ. பொருட்காட்சியில் நடைபெற்ற ஸங்கீத விழாக்கள் வெற்றி பெறச் செய்தவர்களில் இவரும் ஒருவர். காங்கிரஸ் பொன்விழாக் கொண்டாட்டத்தின்போதும் இவர் முக்கியமாகப் பங்கெடுத்துக் கொண்டார். இவரது பிடில் வாசிப்பு இசைத் தட்டுக்களாக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீமான் ராஜமாணிக்கம் 1940-ம் வருஷம் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு ஆஸ்தான வித்வானாக நியமிக்கப்பட்டார். 1942-ல் எட்டயபுரம் சமஸ்தான வித்வானாயிருந்தார். திருவாங்கூர் மன்னர் இவருக்கு ஒரு யானையைப் பரிசாக அளித்திருந்ததை கும்பகோணம் ஸ்ரீ மங்களாம்பிகைக்கு காணிக்கையாகச் சமர்ப்பித்திருக்கிறார்.

இத்தகைய விசேஷங்கள் பொருந்திய இவருக்குச் சிஷ்யர்கள் பலருண்டு. அவர்களில் மாயவரம் பிடில் ஸ்ரீ கோவிந்தராஜப்பிள்ளையும், ஸ்ரீ சம்பந்தம் பிள்ளையும் ரஸிகர்களுக்கு நன்கு தெரிந்தவர்கள். இப்போதும் ஸ்ரீமான் ராஜமாணிக்கம் குடந்தையில் பல சிஷ்யர்களுக்கு சகல வசதிகளையும் கொடுத்து ஸங்கீத போதனை செய்துவருகிறார்.

இவரது தலைமையில் நடைபெறும் இவ்வருஷ ஸங்கீத மகாநாடு, கர்நாடக ஸங்கீதம் செழிப்புறுவதற்கு, காரியகரமான முடிவுகளைச் செய்யுமென்று எதிர் பார்ப்போம்.

மாதர் மகா சபை

'குங்குமம்'

'அதோ வந்துவிட்டாளே!' என்று அப்பொழுது தான் அகத்துக்குப் போவதற்காக எழுந்த வஸந்தா, அங்கு சரோஜா வந்ததைப்பார்த்து விட்டு உட்கார்ந்து விட்டாள்.

'எங்கே கிளம்பினாய்? என்னைப்பார்த்துவிட்டு உட்கார்ந்து விட்டாய்?' என்றாள் சரோஜா வசந்தாவை நோக்கி.

'ரொம்பநாழி கார்த்துக் கொண்டிருந்தாள் உன் வருகைக்காக. ஒரு வேளை வீட்டில் ஏதாவது அவசர வேலை இருந்து நீ வராமல் இருந்துவிடுகிறாயோ என்னமோவென்று கிளம்பி விட்டாள்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'மஞ்சுளாவின் புக்ககத்துப் புராணத்தை அரை குறையாய் நேற்றே விட்டு விட்டு வந்து விட்டோமே, இன்றைக்காவது கொஞ்சம் சீக்கிரமாக வந்து மீதியையும் சொல்லி முடித்துவிடவேண்டுமென்று தான் நானும் உங்களுக்கு முன்னாலேயே அவசரம் அவசரமாய் வீட்டு வேலையை யெல்லாம் முடித்துக் கொண்டேன். காலையில் அவருடைய சினேகிதர் யாரோ ஒருவர் சாப்பிடுவதற்கு வருவதாகச் சொல்லியிருந்தாராம், அதற்காக அவருக்கும் சேர்த்து சமையல் செய்யச் சொல்லியிருந்தார். ஆனால் சினேகிதர் வரவில்லை,' என்று ஸரோஜா சொல்கையில் 'இந்த ரேஷன் காலத்திலும் இந்தமாதிரி பொறுப்பற்ற, பிறர் கஷ்டம் தெரியாத ஜந்துக்கள் எத்தனையோ இருக்கிறதுகள்' என்றாள் பானு.

'அவசரப்படுகிறாயே. மிகுதியையும் கேள். சரி. அவர்தான் வரவில்லையே குழம்பு, ரஸம், காய்கறிகளெல்லாம் அப்படியே மிகுந்து கிடைக்கிறது. ராத்திரிக்கு இதையே வைத்துக்கொண்டு விடலாம். ராத்திரிக்கு வேறு தனியாக சமையல் செய்யவில்லை. பால்காரன் பால்கொண்டு வந்து கொடுத்ததும் நாலு கரியைப் போட்டு, கரியடுப்பை மூட்டி பாலைக் காய்ச்சிவிடுகிறேன், அவ்வளவுதான் சமையல். இப்பொழுதே சொல்லிவிட்டேன்' என்று அவரிடம் (கணவரிடம்) சொன்னேன். சரி, நீ சொல்லிவிட்டால் அதற்குமேல் அப்பீல்கூட உண்டா என்ன? என்று சொல்லிவிட்டு அவர் ஆபீசுக்குப் போய்விட்டார். மீதி வேலையெல்லாம் முடித்துக்கொண்டு நான் இங்கு வருவதற்குப் புறப்பட்டால் காலையில் வருவதாகச் சொல்லிய அந்த அசடு 'ரங்காச்சாரி (ஸரோஜாவின் அகமுடையான்) இருக்கிறாரா?' என்றது. இன்னும் ஆபீசிலிருந்து வரவில்லை' என்றேன். 'அப்படியா? நான் காலையிலேயே வருவதாகச் சொல்லியிருந்தேன், வர சரிப்படவில்லை. ராத்திரி வந்து பார்க்கிறேனென்று சொல்லுங்கள்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது' என்றாள் சரோஜா.

'சாப்பிடுவதற்கு வருவதாகச் சொல்லிற்றா, இல்லையா?' என்றாள் ருக்கு.

'அதைச்சொல்லியிருந்தால் ஒரு விசாரம் விடுமே! இந்தப் பொறுப்பற்றதுகளெல்லாம் திடுதிப்பென்று சாப்பிடுகிற வேளைக்கு வந்து நிற்குங்கள். அப்பொழுது திண்டாடுவதைவிட மிகுந்துபோனாலும் போகிறதென்று ஒரு துகையல் அரைத்து, வாழைக்காய் கறி பண்ணி, கால்படி வெண்கலப் பாத்திரத்தில் அரிசியைக் களைந்து வைத்துவிட்டு வந்தேன்.' என்றாள் சரோஜா.

'சரிதான், என்னடியம்மா என்னமோ சம்பந்தமில்லாமல் சொல்லிக்கொண்டு போகிறாளே யென்று பார்த்தேன். நேரமாய் விட்டதற்குக் காரணம் சொல்கிறாயா? அந்தக் காரணத்தையெல்லாம் யாரும் கேட்கவில்லை. மஞ்சுளாவின் மாமனார் படலம் ஆரம்பமாகட்டும்' என்றாள் விமலா.

'பிறத்தியாருடைய குடும்ப ரகசியத்தைக் கேட்டுத்

தெரிந்துகொள்வதில் இந்த ஜனங்களுக்கு என்னதான் ஆனந்தமடியம்மா! மஞ்சுளாவின் மாமனார்; அவர் ஒரு அப்பாவி மனுஷராம் பாவம். அகமுடையாள் கீறின கோட்டை விட்டு மயிரிழை கூடத்தாண்டமாட்டாராம். தாண்டும்படியாக அவள் விட்டதும் கிடையாதாம். தெருவில் காய்கறி போனால் தானாகக் கூப்பிட்டுப் பேரம்பேசி வாங்கமாட்டாராம். காய்கறிகாரனைக் கூப்பிட்டு வண்டியைத் தெருவில் நிற்கச் செய்துவிட்டு 'யாரடி அங்கே?' என்று அகமுடையாளைக் கூப்பிடுவாராம். உள்ளே யிருந்து அவள் வந்துதான் பேரம்பேசி வாங்கியாக வேண்டுமாம். வேஷ்டியோ, சேலையோ எது வாங்கியாக வேண்டியிருந்தாலும் அவள் போய்த்தான் வாங்கியாக வேண்டுமாம். தப்பித்தவறி அவர் ஏதாவது வாங்கிக் கொண்டு வந்துவிட்டால் ஆயிரத்தெட்டு தோஷம் சொல்லி அசடு பட்டம் கட்டுவாளாம். மஞ்சுளா தங்கமான பெண் என்பது அவருடைய அபிப்பிராயமாம். எதற்காவது மாமியார்காரி கோபித்துக்கொண்டால், சிறிசு, அதற்கென்ன தெரியும். போகப் போக எல்லாம் சரியாகப் போய் விடும். ஏதாவது தப்பித்தவறி கொட்டிவிட்டால் கைதவறிப் போய்விட்டது. அதற்கு அதைக் கோபித்துக்கொண்டால் அது என்ன செய்யும்? எதையும் கொஞ்சம் நிதானமாக ஜாக்கிரதையுடன் செய்யடியம்மா என்று நல்லதனமாகச் சொன்னால் நாளை மறுநாள் தானாகக் கவனித்துச் செய்கிறது. நமக்குக் கை தவறுகிறதேயில்லையா?' என்று மஞ்சுளா பக்கம் பரிந்து பேசுவாராம். 'புருஷர்கள் நீங்கள். உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போகிறதானே? பெண்டுகள் விவகாரத்தில் எதற்காகத் தலையிடுகிறீர்கள்? அது கைதவறியா கொட்டிவிட்டது? அத்தனையும் மன அகங்காரம், என்று ஒரு உலுக்கு உலுக்குவாளாம்; அவ்வளவுதான். மறு பேச்சு பேசாமல் கப் சிப் என்று வாயை மூடிக்கொண்டு விடுவாராம். மாதம் பிறந்தால் அறுபது ரூபாய் பென்ஷன் வருகிறதாம். பென்ஷனை வாங்கவேண்டியது, அவள் கையில் கொடுத்துவிட வேண்டியது. அவ்வளவுதான் அவர் கண்டது. வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்குவது, வீட்டு வாடகையைக் கொடுப்பது, எல்லாம் அவளுடைய வேலைதானாம். கைச் செலவுக்கு ஓரணா, இரண்டணா வேண்டுமென்றால்கூட அவள் கையைத்தான் எதிர்பார்க்க வேண்டுமாம். வீட்டு வாடகையைத்தான் கொடுக்கிறாளே, அதை சல்லிஸாகக் கொடுப்பாளா? இங்கே ஒழுக்கு, அங்கே பொத்தல், இங்கே காரையே போய்விட்டது, வாடகை வாங்கமாத்திரம் தேதி தவறாமல் வந்துவிடுகிறீர்களே. ரிப்பேர் செய்வதற்கு மாத்திரம் மறந்துபோய் விடுகிறதோ?' என்று ஆயிரத்தெட்டு 'ஷரா' சொல்லிக்கொண்டுதான் கொடுப்பாளாம். இதற்காகவே வாடகை வாங்க வருகிறவர் இரண்டு, மூன்று மாதம் கழித்துக்கூட வாடகையை வாங்கிக் கொள்வாராம் என்று சரோஜா சொல்லிக்கொண்டு வருகையில் இந்தக் காலத்தில் கூடவா வீட்டு வாடகை விஷயத்தில் அவ்வளவு தைரியமாகப் பேச முடிகிறது?' என்றாள் சாந்தா.

'இந்தக்காலமென்பதென்ன? எந்தக்காலத்திலும் இப்படிப் பட்டவர்களுக்கு 'சாயும்' என்றாள் பானு.



"............அவர் ஆபீஸிலிருந்து வரவில்லை என்றேன்............"

'அவ்வளவென்ன? மஞ்சுளாவின் கல்யாணப் பேச்சு நடக்கும்போது சீர் வரிசைகள் பற்றிய பிரஸ்தாபம் வருகையில், நீங்கள் ஒன்றும் அசட்டுப் பிசட்டென்று உளறிவைக்காதீர்கள். எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று மஞ்சுளாவின் மாமனருக்கு எச்சரிக்கை செய்துவிட்டுத்தானே, அது சம்பந்தமாகப் பேசவந்துவிட்டாளாம். என்னமோ ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவழித்து வக்கீலுக்குப்படித்துப் பாஸ் செய்து கோர்ட்டில் நாலு வார்த்தை சேர்ந்தாப்போல் சொல்லத் தெரியாமல் சிலர் திணறித் திக்கு முக்காடுகிறார்களே! எங்கள் மாமியாரிடம் இந்த வக்கீல்களெல்லாம் என்ன செய்துகொள்ள முடியும்! என்கிறாள் மஞ்சுளா. ஒவ்வொரு விஷயத்தையும் சதுரம் தீர்த்து பட்டு கத்திரித்தமாதிரி முன்னுக்குப்பின் விரோதமில்லாமல் சொல்லி எதிராளியை ஒரே நிமிஷத்தில் மடக்கி விடுவாளாம். எதையாவது பேரம் பேசுவதென்றால் நாக்கில் 'நரம்பு' இல்லாமல் அந்தமாதிரி யாராலும் கேட்கவே முடியாதாம். மூன்று ரூபாய் என்று சொல்லும்பொருளை மூன்றணுவுக்குக் கேட்பாளாம். கடைசியில் எட்டணுவுக்கு அதை வாங்கியும் விடுவாளாம். அந்தத் தெருவில் உள்ள குடும்ப சச்சரவுகளெல்லாம் அவளிடம்தான் வந்து தீர வேண்டுமாம். அந்த வட்டாரத்திலேயே கனகாம்புஜத்தைத் தெரியாதவர்கள் கிடையாதாம்.



"......................யாரடி அங்கே? என்று......................"

எப்பொழுதும் ஒரே அட்டகாசம், ஆர்ப்பாட்டம்தானும். மெதுவாகப்பேசுவதென்பதே அவளுக்குத் தெரியாதாம். ஒரே இரைச்சல்தானும். மாமனாரும் ஏதோ அவள் பாடு எதையாவது செய்துகொண்டு போகட்டும். நமக்குத் தொல்லையில்லாமல் இருந்தால் போதும்' என்று எல்லாவற்றையும் அவள் பொறுப்பிலேயே விட்டு விட்டாராம். காலையில் எழுந்திருக்க வேண்டியது, ஸ்நானம்செய்ய வேண்டியது, ராமாயணம், கீதை முதலியவைகளைப் பாராயணம் செய்ய வேண்டியது, சமையல் ஆனதும் பெருமாளுக்கு ஆராதனம் செய்யவேண்டியது, சாப்பிட வேண்டியது, கொஞ்ச நாழி தூங்க வேண்டியது. பிறகு பாரதம், பாகவதம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், மற்றும் ஆசாரியர்கள் அருளிச் செய்த கிரந்தங்கள் ஆகியவைகளைப் பார்க்க வேண்டியது. மாலையில் 'பார்க்குக்கோ', பீச்சுக்கோ போக வேண்டியது. அங்கே தன் வயதுக்கொத்தவர்

களுடன் கொஞ்சநாழி பொழுது போக்குக்காகப் பேசி விட்டு அஸ்தமித்ததும் வீட்டுக்கு வர வேண்டியது. சந்தியாவந்தனத்தைச் செய்ய வேண்டியது. சகஸ்ரநாமத்தைச் சொல்ல வேண்டியது. சாப்பிடவேண்டியது. படுத்துக்கொள்ள வேண்டியது. பின் மாலை (விடியற் காலை) நாலு மணிக்கு எழுந்திருக்கவேண்டியது. பகவானின் நாமஸ்மரணை செய்ய வேண்டியது. இதன் மத்தியில் ஸ்டோருக்குப்போய் ரேஷன் சாமான்களை வாங்கிவருவது, பத்திரிகை படிப்பது முதலியவைகளையும் கவனிப்பாராம். இதெல்லாம் எதற்காகச் சொல்ல வந்தேனென்றால் அவருக்கு மஞ்சுளாவின்மீது அசாத்திய வாத்ஸல்யமாம். இருந்து என்ன செய்வது! அவருடைய சிபார்செல்லாம் வெறும் பேச்சளவோடு சரிதானும். தீர்ப்பளிக்கவேண்டியவள் மாமியார்காரிதான்'' என்றாள் சரோஜா.

'ஏன், அவ்வளவு 'காதலைக்' கொட்டிக் கடிதம் எழுதியிருக்கும் அகமுடையான் இருக்கும் போது, அவளுக்கு யார் எப்படி இருந்தால் என்ன கவலை?' என்றாள் வசந்தா.

'அந்த 'சமத்தை'ச் சொல்லு' என்று ஸரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில், ஸரோஜா! உன்னை உன் அகத்துக்காரர் கூப்பிடுகிறார், கூட யாரோ ஒருவர் வந்திருக்கிறார்' என்று சரோஜாவின் பக்கத்து வீட்டுப் பெண் அங்கே வந்து சொல்லிற்று.

'நான் வருகிறேன். மீதியை நாளைக்கு வந்து சொல்கிறேன்' என்று எழுந்தாள் ஸரோஜா.

—



சமீபத்தில் திருவனந்தபுரம் ரேடியோவில் அருணாசலக்கவி இயற்றிய ராம நாடகம் இசையோடு ஒலி வடிவாக்கப்பட்டு ஒலி பரப்பப்பட்டது. இதில் ஸ்ரீமான்கள் அரியக்குடி, செம்மங்குடி, பாலக்காடு கே வி. நாராயணஸ்வாமி, வீணை கே. எஸ். நாராயணஸ்வாமி, பி. ராஜம் ஐயர், ஸ்ரீமதிகள் கே. எஸ். தனம், ருக்மிணி ஸௌந்தரராஜன் முதலியோர் கலந்துகொண்டார்கள். அவர்களுள்ள படம்.



இளவரசி எலிஸபெத்துக்குப் பிறந்துள்ள குழந்தைக்கு நாமகரணமாகிவிட்டது. பக்கிங்ஹாம் அரண்மனையில் ரோவ் என்ற நர்ஸ் குழந்தையை இந்த வண்டியில் படுக்கவைத்து சூரியவெளிச்சத்தில் உலவச் செல்கிறார்.

அத்தியாயம் 14

குறிப்பிட்ட தினத்தில் ராமசாமியைப் பார்க்க நடராஜன் வந்து சேர்ந்தான். உடனே ராமசாமி சேகரனை அழைத்துவர ஒரு ஆளை அனுப்பினான். சேகரன் வரும்போதே, "ஹலோ! நடராஜன்! உங்களைப் பார்க்கணும்னு ரொம்ப நாளா ஆசை! பிஸினஸ் எல்லாம் சௌகரியமாக நடந்து வருகிறதா?" என்று குசலம் விசாரித்துக் கொண்டே வந்தான். நடராஜன் பொட்டாஸியம் ஸயனைடைக் குடிக்கப்போகிறவன்போல மெய் நடுங்கினான். இந்தச் சனியன் பிடித்த சேகரன் இப்போது எங்கிருந்து வந்து சேர்ந்தான்? ராமசாமியிடம அவன் வரக் காரணமென்ன?

"ராமசாமி! ஸாரை உனக்குத் தெரியாதே? இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட். கங்கா, லைப், தீனபந்து அஷ்யூரன்ஸ் இதுக்கெல்லாம் ஏஜெண்ட். நீயும் இவரிடமே இன்ஷ்யூர், செய்துகொள்.. மிஸ்டர் நடராஜன்! இவர் நல்ல பிஸினஸ்காரர்! இவரை இருபதினாயிரத்துக்குப் பிடித்துப் போடுங்கள்..."

நடராஜன் சிலைபோல உட்கார்ந்திருந்தான். சேகரன் நடராஜனுக்கு இன்ஷ்யூரன்ஸ் பிஸினஸ்ஸில் மற்ற சமயங்களில் உதவி செய்திருந்தால், அவனைத் தன் பிரிய சகாவாக ஏற்றுக் கொண்டிருப்பான். ஆனால். இப்போதிருந்த சந்தர்ப்பங்கள் அதற்கு இடையூறாக இருந்தன.

"ஆனால் ராமசாமி! நம்ப ஸாரைக் கேட்டால் உனக்கு ஒரு அட்வைஸ் கொடுப்பார். நீ அவருடைய சிநேகிதன் என்பதற்காகக் காதோடு சொல்லுவார். தீனபந்துவைவிட கங்கா லைப்லே நல்ல லாபம் கிடைக்கும்..."

தான் முன்பு அவனிடம் சொன்னவற்றை அப்படியே ஒப்பிப்பதைக் கேட்டவுடனே நடராஜன், சேகரனை மெச்சிக்கொள்வதற்குப் பதிலாக மனதிற்குள் சபித்தான்.

சேகரன் தொடர்ந்தான். "இன்னொரு விஷயம் ராமசாமி! இப்பவே இன்ஷ்யூர் செய்துகொண்டுவிட்டால் நல்லது. இல்லாவிட்டால் உனக்கு வயது ஆக ஆக பிரீமியம்தான் ஜாஸ்தியாகும். இப்போதே சொல்லிவிட்டேன்...அப்புறம் நாளைக்கு உனக்குப் பாரிசவாயு வந்துவிட்டால் ஸாரிடம் இன்ஷ்யூர் பண்ணிக்கொள்கிறேன் என்று கெஞ்சினாலும் நடக்காது. ரொம்ப கண்டிப்பான மனிதர்..."

சேகரன் நடராஜனைப் பார்த்தான். நடராஜன் 'மோட்டு வளை'யைப் பார்த்தான். இப்போது ஒன்றும் தெரியாதவன்போல ராமசாமி ஆரம்பித்தான்.

"அது கிடக்கட்டும் ஸார்! இப்போ நம்ப பிஸினஸ்ஸைக் கவனிப்போம். அந்த வைர அட்டிகை..."

"ஸார்! ஒரு முக்கியமான எங்கேஜ்மெண்ட் இருக்கு. நாளைக்குப் பார்க்கிறேனே!" என்று சொல்லிவிட்டு நடராஜன் எழுந்துகொண்டான்.

சேகரன் அவனுக்கு முன்னுடி எழுந்து கதவைத் தாளிட்டுவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டான்.

அதற்குள் ராமசாமி, ''நீங்கள் போவதாவது? நீங்கள் என்ன விலை சொன்னுலும் சரி, வைர அட்டிகையை வாங்கிவிட்டுத்தான் மறுகாரியம்!''

''வைர அட்டிகையா? ராமசாமி! நீ அவரிடம் வாங்கவேண்டாம். என்னிடமே வாங்கிக்கொள்ளலாம்...... இன்னும் குறைவான விலை... மிஸ்டர் நடராஜன்! போட்டிக்கு வருவதற்கு மன்னிக்க வேண்டும்''

நடராஜன் திரு திருவென்று விழித்தான்.

''நீ சும்மாயிருடா! நான் ரம்ப ஸாரிடம் வைர அட்டிகையை வாங்கிக்கொள்வதாக முன்னுடியே வாக்குக் கொடுத்துவிட்டேன. அதை மீறக் கூடாது.''

''பாருங்கள், மிஸ்டர் நடராஜன்! அரிச்சந்திரனுக்கு அண்ணுமாதிரி பேசுகிருன்!''

''ஸார்! அந்த அட்டிகையை எடுங்கள். இவன் சும்மா இப்படித்தான் வளவள என்று பேசிக்கொண்டிருப்பான்'' என்றுன் ராமசாமி.

''எங்கிட்டே அட்டிகையும் கிடையாது ஒன்றும் கிடையாது'' என்று நடராஜன் கடுமையாகப் பதிலளித்தான்.

''ஸார் என்னடா பொம்மனுட்டியா, அட்டிகையைப் போட்டுக்கொள்ள? அவரிடம் இருப்பது கங்கா லைப், தீனபந்து லைப் இவற்றின் பிரீமியம் டேபிள்கள்தான்...நீ... வேணுமானுல் பார்த்துக்கொள்...'' என்று சொல்லிவிட்டுச் சேகரன் நடராஜனின் தோல்பையைச் சுவாதீனமாக எடுத்துக்கொண்டான்.

சேகரனுக்குச் சுடச்சுட ஒரு அறை கொடுக்க வேண்டும் என்ற ஆவலை நடராஜன் வெகு சிரமப்பட்டு அடக்கிக்கொண்டான்.

இதற்குள் சேகரன் வைர அட்டிகையை எடுத்து, அதைப் பரிசோதனை செய்ய ஆரம்பித்தான்.

''அசல் வைரந்தானு?'' என்றுன் ராமசாமி.

''பின்னே என்ன இவர் உன்னிடம் போலி வைரத்தை விற்க வருவாரா? ரொம்ப நாணயமான வியாபாரம். அதில் கொஞ்சங்கூட சந்தேகம் கிடையாது. எத்தனையோ பெரிய மனிதர்கள் இவரிடம் வைரம் வாங்கிக்கொண்டு சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறுர்கள்!''



இந்த மாதிரி சமயங்களில் நடராஜன் மரியாதையைவிட நேரடியாகத் திட்டுவதையே விரும்பினான். இந்தப்போலி மரியாதை அவனைச் சித்திரவதை செய்தது.

"சரி! என்ன ஸார் விலை சொல்றேள்?"

"முப்பதினாயிரம் ரூபாய்" என்று நடராஜனுக்குப்பதிலாக சேகரன் விலை சொன்னான்.



"அவ்வளவு முடியாது ஸார்! இருபதினாயிரத்துக்குமேலே கொடுக்க நம்மால் முடியாது" என்றான் ராமசாமி.

"ஒரே பேச்சு, மறு விலை கிடையாது. ஸாருக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. முப்பதினாயிரம் இஷ்டமா, இல்லையா?"

நடராஜனுக்கு இனி இந்த எமகாதகர்களிடமிருந்து தப்பிக்க முடியாது என்று தோன்றியது. நேரடியான பேச்சை ஆரம்பிக்க அவன் விரும்பினான்.

"அது கிடக்கட்டும். மேலே என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கடுமையான குரலில் கேட்டான் நடராஜன்.

"மேலே என்ன; எல்லோரும் டிபன் சாப்பிடுவோம்."

"உம்ம்..."

"அப்புறம் நாம்ப ரெண்டுபேரும் கதலீபுரத்திற்குப் போவோம்."

அன்றிரவு ராமசாமியும் அவன் மனைவியும் சென்னை செல்லும் வண்டியில் இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்டில் ஏறிக்கொண்டார்கள்.

சேகரனும். நடராஜனும் அதே வண்டியில் மூன்றாம் வகுப்பில் அமர்ந்து கொண்டார்கள். சேகரன் நடராஜனை ஏன் பம்பாயிலேயே போலீஸில் காட்டிக் கொடுத்திருக்கக்கூடாது? அவன் எதற்காக நடராஜனைத் தன்னுடன் கதலீபுரத்திற்கு அழைத்துக் கொண்டு போகவேண்டும்? இதற்கு ஒரே ஒரு காரணந்தான் சொல்ல முடியும். பிரபல நாடகங்களிலும், சினிமாக்களிலும் கதாநாயகன் தன் காதலியின் முன்னால் தன் வீரபராக்ரமங்களைக் காட்டுவதுபோல சேகரன் நடராஜனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொண்டு விசாலாட்சியின் முன்னால் நிறுத்த விரும்பினான். தான் நிரபராதி என்பதை பயங்கரம் அண்டு கோ. வுக்கு நடராஜன் மூலமாகவே தெரியப்படுத்தவேண்டும் என்பதும் அவனுடைய விருப்பம். ராவ்பகதூர் பயங்கரம் உடனே தன் பெண்ணையும், பாதிராஜ்யத்தையும் சேகரனுக்கே கொடுத்து தன்னை மன்னித்துவிடும்படி கெஞ்சுவதாக அவன் மனத்திரையில் ஒரு காட்சி அடிக்கடி தோன்றிக்கொண்டிருந்தது.

சேகரன் நடராஜனை வெகு ஜாக்ரதையாகக் கண் காணித்துக்கொண்டிருந்தான். ஆனால் தன் விதியைத் தைரியமாக எதிர்பார்க்கும் தீர புருஷன்போல நடராஜன் உட்கார்ந்திருந்தான். தப்பித்துக்கொண்டு ஓட விரும்பும் ஒரு கோழையின் முகபாவம் அவனிடம் கொஞ்சங்கூட இல்லை. தூக்குமேடைக்குப் போகுமுன்னால் ரிப்பன்ட்ராப், கோயெரிங் போன்ற தீரர்கள் இப்படித்தான் இருந்திருக்கவேண்டும். நடராஜனுக்குப் பீதி கொஞ்சங்கொஞ்சமாக மறைந்து பழைய பேச்சும் நடையுங்கூட ஏற்பட்டுவிட்டன.

"கதலீபுரத்தில் எல்லோரும் சௌக்கியமா, மிஸ்டர் நடராஜன்? இவ்வளவு நாட்களாக அவர்களைப்பற்றி ஒரு சமாசாரம்கூடக் கேள்விப்படவில்லை" என்றான் சேகரன்.

"ஓ! எல்லோரும் சௌக்கியம். ராவ்பகதூர் நரஸிம்மம் இரண்டு, மூன்று துப்பறியும் கதைகளை எழுதிவிட்டு இந்த வருஷத்து இலக்கிய



நோபெல் பரிசை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்!

சீமாச்சுவின் கைங்கரியத்தால் ஊரில் தவளைகளே இல்லாததால் இப்போது அவன் பொழுதுபோக்காக ஊரிலிருக்கிற நாய், பன்றி, சில சமயங்களில் மனிதன் இவர்களைக் கல்லால் அடித்துக் கொண்டிருக்கிறான். வாழைப்பழம் விலை கிராக்கியாக இருப்பதாலும், அடிப்பதற்குப் புரொபஸர்கள் இல்லாததாலும் பாலு சாமிக்கு ரொம்பக் கஷ்டமாகயிருக்கிறது. வைத்தா கதலிபுர நாடகஸபா என்று ஒன்று ஆரம்பிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறான். விசாலாட்சி பெர்னார்ட் ஷாவின் புத்தகம் அடுத்தாற்போல என்ன வரப்போகிறது என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள்."

"விசாலாட்சிக்குக் கல்யாணமாகிவிட்டதா?" என்று பரபரப்புடன் கேட்டான் சேகரன். அவனுக்கே அந்தக் கேள்வி மிகுந்த வெட்கத்தை உண்டுபண்ணியது. முகம் சிவந்தது.

"இல்லை. விசாலாட்சி கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லையாம். ஆயுள் பூராவும் புத்தகம் படித்துக்கொண்டே காலந் தள்ளப் போகிறாளாம்!......நீங்கள் கதலீபுரத்தை விட்டு வந்த பிறகு அவளுடைய நடையுடை பாவனைகளில் மிகுந்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. முன்போலக் கலகலப்பாக இருப்பதில்லை. அவள் சிரிப்பதை நான் பார்த்தே ரொம்ப நாளாகிவிட்டது. உங்களைப்பற்றி எப்போதாவது மாமா திட்டினால் அவள் முகத்தில் வருத்தம் தென்படுகிறது. என்னைக்கேட்டால், அவளுக்கு உங்களிடம் விசேஷ அபிமானம் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லுவேன். அதை நீங்கள் காதல் என்று சொன்னாலும் சரி, அல்லது வேறு எந்தப்பெயரால் அழைத்தாலும் சரி,..."

நடராஜன் மனிதனுடைய பலஹீனத்தைக் கண்டு பிடிப்பதில் சமர்த்தன். மகுடிக்குமுன் சர்ப்பம்போல, நடராஜனுடைய இந்த வார்த்தைகளின் முன்னால் சேகரன் பதுமைபோல உட்கார்ந்திருந்தான். அவன் மனம் விசாலாட்சியிடம் ஓடிற்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டபிறகு சேகரன் நடராஜனைத் தன் எதிரியாகவே நினைக்கமுடியவில்லை.

"எனக்கு ஒரு 'ஐடியா' தோன்றுகிறது, மிஸ்டர் சேகர்! உங்களுக்கு விசாலாக்ஷி நல்ல மாட்சாயிருப்பாள். பெர்னார்ட் ஷாவை மட்டும் படிக்காமல் இருப்பாளானால் அவளைத் தங்கமான பெண் என்று சொல்லுவேன்." இப்படிச் சொல்லும்போது நடராஜனுக்குத் தன் பூர்வ அனுபவம் ஞாபகத்திற்கு வந்தது. அன்று முதல்-அதாவது அவன் தன் காதலைத் தெரிவிக்க முயன்ற அன்று

முதல்—அவனுக்குப் பென்னட் ஷாமேல் சொல் லொணுத க்ஷாத்திரம் ஏற்பட்டிருந்தது.

சேகரன் புன்முறுவல் செய்தான். அவனுக் குச் சொல்லக்கூடிய பதில் ஒன்றும் தோன்ற வில்லை. இப்போது அவனையும் அறியாமல் சேகரனுக்கு நடராஜனிடம் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது. அவனுடைய மனதில் இருந்த உற்சாகத்தில் உலகமே ஸ்வர்க்கபூமியாகத் தோன்றியது. யாரைப் பார்த்தாலும் நல்லவர் களாகவும், நண்பர்களாகவும் தோன்றினர்கள். உலகத்தில் நடக்கும் பித்தலாட்டங்கள், சண்டை பூசல்கள் இவையெல்லாம் பொய்யானவை என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. ஒரு நவீனத் தைப் பிரித்து வைத்துக்கொண்டு அதன் முன் னுரையைப் படித்தான். கொட்டாவி வந்தது. அதன் முதல் அத்தியாயத்தைப் படித்தான். கண்ணைச் சுற்றியது. இரண்டாம் அத்தி யாயத்தை முடித்தான். தூக்கம் கண்ணிமை களின் மேல் கனமாக உட்கார்ந்துகொண்டது. மூன்றும் அத்தியாயத்தைப் படிக்க ஆரம்பித் தான். அப்போது தூங்கவே ஆரம்பித்துவிட் டான். சேகரனுக்குப் பகவான் மற்ற குணங்க ளோடு எந்த சந்தர்ப்பத்திலும், சந்தடி யிலும் தூங்கக்கூடிய மகா உன்னதமான ஒரு குணத்தைக் கொடுத்திருந்தார்.

நடராஜன் சேகரன் பக்கம் பார்த்தான. சேக ரன் வெகு சுகமான நித்திரையில் ஆழ்ந்திருப்ப தைக் கவனித்தான். சட்டென்று அவனுக்கு ஒரு அபூர்வமான யோசனை தோன்றியது. வண்டி வந்து நின்ற இடம் பூனு. ஸ்டேஷன் பிளாட் பாரத்திலிருந்தும், ரயிலுக்குள்ளிருந்தும், வந்த சப்தத்தினுல்கூட சேகரனுடைய தூக்கத்தைக் கலைக்க முடியவில்லை.

நடராஜன் மெதுவாக எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டான். ஒரு குற்றவாளி யின் முகபாவம் கொஞ்சங்கூட இல்லாமல் கீழே இறங்கினன். இறங்கியவன் நேராக ரெயில்வே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ருன். அங்கிருந்த ஒரு கான்ஸ்டேபிளிடம் தன் சட் டைப்பையில் தயாராக வைத்திருந்த ஒரு பழைய பத்திரிகைத்துண்டை எடுத்துக் காட்டினன்.

"இதற்கு என்ன இப்போது?" என்று கொட் டாவி விட்டுககொண்டே கேட்டான் கான்ஸ் டேபிள்.

"உனக்குப் பிரமோஷன் வேண்டுமா? வேண்டு மென்ருல் நான் சொல்கிறதைக் கேள். கிட்டத் தட்ட பதினெட்டு மாதங்களுக்கு முன்னல் ஒரு வைர அட்டிகை திருட்டுப் போயிற்று. அதைத் திருடியவன் இத்தனை நாள் அமெரிக்காவில் ஒளிந்திருந்துவிட்டு. இப்போதுதான் ஆற அமர இந்தப்பக்கம் வந்திருக்கிறன். என்ஜின் வண்டி யிலிருந்து மூன்ருவது வண்டிக்குள் இந்தத் திரு டன் உட்கார்ந்திருக்கிறன். இப்போது நல்ல தூக்கத்தில் இருக்கிறன். எனக்கு மட்டும் உடம்பில் வலு இருந்தால் நானே பிடித்துவிடு வேன். நம்மால் முடியவில்லையே என்றுதான் உன்னிடம் வந்தேன். இப்பொழுதே போனல் கையும் களவுமாய்ப் பிடிக்கலாம்" என்ருன் நட ராஜன். (சேகரன் நடராஜனிடம் பேசும்போது பேச்சுவாக்கில் தான், அமெரிக்கா சென்ற பெரு மையை எடுத்துச் சொல்லியிருந்தான். அதை நடராஜன் வெகு சாமர்த்தியமாக தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டான்.)

கான்ஸ்டேபிள் கண்ணைத் துடைத்துக் கொண்டு அந்தக்காகிதத் துண்டைப் படித்துப் பார்த்தான். அது முன்பு பயங்கர நரஸிம்மம் பத்திரிகைகளுக்குக் கொடுத்திருந்த விளம்பரம். சேகரனின் அங்க அடையாளங்களை கான்ஸ் டேபிள் நன்ருய்ப் படித்துப்பார்த்துக் கொண் டான். கைமேல் பிரமோஷன் இருக்கிறது என்ற எண்ணம் அவனை உந்தித் தள்ளியது. அடுத்தபடியாக 'ஏட்' ஆகிவிடலாம் என்ற சிந் தனை ஸர்வஜன ரஞ்சகமான தூக்கத்தையும் புறக்கணிக்கும் மனவலிமையை அவனுக்கு ஊட்டியது.

"நீங்கள் இங்கேயே இருங்கள். நானேபோய் அவனைப் பிடித்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, அவன் திருடனை வேட்டையாடக்கிளம்பினன்.

அடுத்த நிமிஷம் நடராஜன் பூனு ஸ்டேஷனை விட்டு, அந்தகாரத்தில் மறைந்தான்!

(தொடரும்)



(மேல் படம்)

சென்ற மாதம் 28-ந்தேதி கல்கத்தா பாரதி தமிழ் சங்கத்தார் கவர்னர் ஜெனரல் ராஜாஜிக்கு ஓர் வரவேற்பு நடத்தினர். ராஜாஜி அப்போது பேசுகையில் எடுத்த படம்.

(கீழ் படம்)

டில்லி தமிழ் சங்கத்தார் சமீபத்தில் பாரதி விழாவைக் கொண்டாடினர். அதில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்களைப் படத்தில் காணலாம்.

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப்பூங்கோயிலில்

பி. ஸ்ரீ.

33

ஆழ்வாரும் பாராட்டிய நாயனர்

அரசர் கொலு வீற்றிருக்கிருர். புலவர் பாடுகிருர். யுத்தத்தைப் பாடுகிருர். யானைப்போர் முக்கிய அம்சமாக இருந்ததே அந்த யுத்தத்தைத்தான். இடியிடிப்பதுபோல் முழங்குகிறது போர்முரசு. கொடிகள் வானத்தைத் துடைப்பதுபோலப் பறக்கின்றன. மலை கலங்கப் பாயும் மலைபோலப் பாய்கின்றன யானைகள். இரதங்களைக் குத்தி முறித்துத் தள்ளுகின்றன. களத்திலே அப்படியும் இப்படியுமாகக் கலக்கி வரும்போதே அஞ்சனக் குன்றுகளான அந்த யானைகள் சாதிலிங்கக் குன்றுகள்போலச் சிவந்து காண்கின்றனவே!-என்று அந்தக் கோரத்தையும் காட்டுகிருர் புலவர்.

இந்த அபாயகரமான போர்க்களத்திலே வந்து சிக்கிக்கொண்ட எதிரிகளைத் தப்புச் செய்தவர்கள் என்று கண்டிக்கிருர். வெற்றி பெற்ற பெருமிதத்திலே விழாக் கொண்டாடும் இந்த அரசரோ 'செங்கண்மால்' என்று புகழப் பெறுகின்ருர். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்த இராம பிரானின் திருக்குலம் என்று உரிமை கொண்டாடும் சோழரல்லவா?

ஆம், கோச் செங்கட் சோழர் என்று பிரசித்திபெற்ற சோழர் பெருமான் இவர். 'கோச் செங்கட் சோழ நாயனர்' என்று சேக்கிழார் பாடியிருக்கிருரே, அந்த அரசர்பிரான்தான் திருவானைக்காவில் சிவலிங்கத்தின் மேலே சருகு உதிராமல் தன் வாய் நூலினல் மேற்கட்டி செய்து பேறு பெற்ற சிலந்திதான் சிவ புண்ணியத்தால் இந்தச் சோழ ராஜாவாகப் பிறந்தது என்று பாடுகிருர் சேக்கிழார் பெருமான். சுபதேவன் என்னும் சோழ மன்னருக்குக் கமலவதியென்ற ராணி வயிற்றில் பிறந்தவர். காலம் தாழ்ந்து பிறந்ததால் குழந்தை சிவந்த கண்களோடு இருந்ததென்றும் 'என் கோ செங்கண்ணனே!' என்று குழந்தையைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் கமலதேவி இறந்துபோனளென்றும் பெரிய புராணம் சொல்லுகிறது. இந்த அரசர் பூர்வ ஜன்ம உணர்ச்சியோடுபிறந்து சிவபக்தராய் அரசியற்றி வந்தார் என்று பாடியிருக்கிருர் சேக்கிழார்.

'களவழி நாற்பது' என்ற நூல் இந்த அரசரைச் சிறந்த போர் வீரராகக் குறிப்பிடுகிறது. இந்த அரசரைச் 'செங்கணன்' என்றும் 'செங்கட்சோழன்' என்றும் சொல்வதுண்டு. போர்க்களங்களிலே சினத்தாலும் வீரத்தாலும் சிவந்த கண்கள், பின்னுளில் பக்திக் காதலால் கசிந்து கசிந்து உருகிச் சிவந்தன என்று ஊகஞ் செய்யலாம். போர்க்களம் பாடுவதால் நூலுக்குக் 'களவழி' என்று பெயர்.

போர்க்களத்தை நீணப்பூட்டிப் பாடும் புலவர் யானைச்சண்டையை வருணிப்பதுபோல் குதிரைச் சண்டையையும் வருணிக்கிருர். மலை மீது பாயும் புலிகளைப்போல் யானைகளின் மஸ்தகத்தில் உத்சாகமாப் பாய்கின்றன வீரமறவர்கள் ஓட்டிவரும் குதிரைகள் அந்தக் குதிரைகள் உதைக்க, அரசர்கள் ஆடம்பரமாய்ப் பிடித்துவந்த சந்திரவட்டக் குடைகள் கீழ்மேலாக நின்றன. அவர்கள் பட்டத்து யானைகளோடு விழும்போது, இந்தக் காட்சிக்கு என்ன உபமானம் சொல்லலாம் என்று சிறிது ஆலோசித்த புலவர் 'ஓஹோ! இது தான் பொருத்தமான உபமானம்' என்ற பீடிகையுடன், 'பசுக்கூட்டத்தால் உதைக்கப்பட்ட நாய்க்குடைகள் பட்டபாடு பட்டன அந்த அரசர் குடைகள்!' என்கிருர். கோச்செங்கட் சோழர் கோபத்தோடு கூடிய செங்கண்மாலோடும் முருகக் கடவுளோடும் ஒப்பிடப் பெறுகின்ருர்.

அந்த அரசர் கேட்டுக்கொண்டிருக்கிருர். புலவர் 'களவழி' பாடிக்கொண்டே போகிருர். குதிரைமேலிருந்த வீரர்களைக் காலாட்கள் நெருங்கி வீரக்கழல்

கள் அணிந்த கால்களை வெட்டி எறிகிறார்கள், தலையை எட்ட முடியாததால், மறவர்கள் பளிச்சுப் பளிச்சென்று வாள் வீச வீச அதுவரையில் போர்க்களங்களில் எத்தனையோ வெற்றிபெற்றிருந்த யானைகள் பாகர்களை இழந்து நடுங்குகின்றன. அந்த யானைகளின் துதிக்கைகள் வெட்டப்பட்டுப் பவளத்தைச் சொரியும் பை போல் இரத்தம் சொரிகின்றன, ஆஹா, என்ன கொடுமை! சில வீரர்கள் வீசிய வேல் இரண்டு கொம்புகளுக்கும் நடுவே தைக்க, அந்த யானைகள் மூன்று கொம்புகள் உள்ளவை போலக் காணப்படுகின்றன ஒரு சமயம். யானை மேல் யானை சாய அம்புகள் பாய்ந்து உடல்களை மொய்த்துக் கொள்கின்றன, குன்றில் குருவிகள் மொய்ப்பது போலே. அந்தப் போர்க்களத்திலே பிரசித்தமாகப் பறக்கிறது கோச் செங்கட்சோழர் கொடி என்று பாடுகிறார் புலவர்.

புறங்காட்டி ஓடத் தெரியாத மறவர்கள் ஒருவருக்கொருவர் எதிரே ஓடுகிறார்கள். ஆயுதங்களின் ஜண ஜண ஒலிகளுக்கிடையே-திசைகள்தோறும் சிதறிப்புரளுகின்றன தலைகள், பனங்காட்டில் பெருங்காற்று வீசப் பனம்பழங்கள் உதிர்ந்து புரளுவது போலே. சண்டமாருதம் போலப் பிரவேசித்த அந்த மறவர்களோடு சிங்கநாதம் செய்து வேகமாய் வருகிறார் இந்தச் சோழமன்னரும், மாலையும் கழுத்துமாக, பகைவர்களுக்கு இடையே மாலையோடு பொன்னாரமும் போர்வலியும் மார்பிலே பிரகாசிக்க,—ஆஹா, அந்த வீர சௌந்தர்யம் கண் கொள்ளாக் காட்சி!



ஒரு சமயம் கொடிகட்டிய தேரில் வாளுங்கையுமாய்ப் போகிறார். ஒருசமயம் வேலும் கையுமாய்ப் பகையரசர்களோடு பட்டத்து யானைகளையும் வீழ்த்தி வருகின்றார், சிங்கத்தோடு மலைச் சிகரத்தையும் ஒடித்து வீழ்த்தும் இடிபோலே. கோபத்தை மூட்டிய எதிரிகள் இந்தக் கோபத்திற்குப் பலியாகிறார்கள். கடலில் தோணியும் அலையும்போலக் காண்கின்றன பிணமும் இரத்த வெள்ளமும். இந்த அரசரோ கொஞ்சமும் கலங்கவில்லை என்கிறார் புலவர்.

இந்த அரசர்பிரானின் நாட்டு வளத்தைப் பாடுகிறார் காவேரியாறு கரைபுரண்டு வருவதைப் பாடுகிறார். அந்த வெள்ளத்தின் முழக்கம் இந்த அரசரின் வெற்றி முரசை நினைப்பூட்டுகிறது கவிஞருக்கு. காவேரி ஓடி வளஞ்செய்யும் நாட்டை உடையவர், இரத்தமும் ஆறாக ஓடி நாடு பாழாகச் செய்து விட்டாரே!—என்ற ஏக்கம் போலும்.

போர்க்களத்திலே பருந்துகளும் கழுகுகளும் வட்டமிடுகின்றன. சிவந்த காக்கைகளும் பறந்து திரிகின்றனவாம். இதென்ன வெள்ளைக்காக்கை கண்ட கதைதானா? இல்லை, உள்ளது உள்ளபடியே தான் வருணிக்கிறார். புலவர் களம் பார்த்தவர். இரத்தத்தில் படிந்து தோன்றிய காகங்களே 'அதோ சிவந்த காக்கைகள்' என்று சொல்லும்படியாகத் தோன்றுகின்றன.

குடல்களைக் கவ்வி இழுக்கின்றன நரிகள். தூணிலே தம்மைக் கட்டியிருக்கும் சங்கிலியைக் கவ்வியிழுக்கும் வேட்டைநாய்கள்போல் காணப்படுகின்றனவாம் அந்த நரிகள். இந்த இரண்டு காட்சிகளையும் பார்த்திருந்தால்தானே இப்படி வருணிக்கமுடியும்.

போர்க்களம் அப்படியே ஓடி வந்து விடுகிறது இந்தக் கொலு மண்டபத்திற்குள்ளும்! என்ன விபரீதம்! பூமிதேவி எவ்வளவு அழகாய்ப் பச்சைப்பட்டாடை உடுத்துக் கொலுவிருந்தாள், அந்தப் போர் நடந்த இடத்திலே அந்தப் போர் நடப்பதற்கு முன் போர் முடிந்ததும் பச்சைப்போர்வையை இழந்து சிவந்த போர்வையைப் போர்த்துக்கொள்கிறார். இந்த விபரீதத்தைத்தான் எவ்வளவு அழகாய்ப் பாடுகிறார் கவிஞர்:

மையில்மா மேனி நிலமென்னும்
நல்லவள்
செய்யது போர்த்தாள்போல்
செவ்வந்தாள்,
—பொய் தீர்ந்த
பூந்தார் முரசின் பொருபுனல்
நீர்நாடன்
காய்ந்தாரை அட்ட களத்து!

[மையில்-குற்றமில்லாத. மாமேனி-அழகிய மேனி. செய்யது-சிவந்த போர்வை. செவ்வந்தாள்-சிவந்தாள். பூந்தார்-வெற்றி மாலை. பொரு புனல்-கரையோடு மோதும் தண்ணீர். காய்ந்தார்-கோபித்து வந்த எதிரிகள். அட்ட-கொன்ற.]

இந்த நாட்டிலே வானமும் பொய்ப்பதில்லை, காவேரியும் பொய்ப்பதில்லை. அரசரும் பொய்ப்பதில்லை என்று பாடி வரும்போதே, 'இத்தகைய அரசர் பெருமானிடம் அருளொழுக்கமும் அமைந்துவிட்டால்! என்று புலவர் பெருமான் பெருமூச்சு விடுவது போலத் தோன்றுகிறது.

நல்லவளான பூமிதேவியின் பொன்மேனி—பச்சை போர்த்த, பொன் விளையும் மேனி-எப்படிப் புண்மேனி ஆகிவிட்டது!—என்று புலம்பியவர், போர் முடிந்த களத்திலே ஒரு காட்சி காட்டுகிருர். மரங்கள் நிறைந்த சோலையில் காற்று அதிகமாய் வீசப் பயந்து வேறு வேருக ஓடும் மயிலின் கூட்டம்போல், புருஷரை இழந்த பெண்கள் தலைவிரி கோலமாய் நாலு திசைகளிலும் அலறிக் கொண்டு போகிருர்கள்.

இந்தச் சோழமன்னர் அன்பு மழை பெய்ததும் முகம் கவிழ்ந்து நிலம் சேர்ந்த யானைகள் தாம் எப்படிக் காண்கின்றன:

வெள்ளிவெண் நாஞ்சிலால்
ஞாலம் உழுவனபோல்
எல்லாக் களிறும் நிலஞ்சேர்ந்த,
—பல்வேல்
பணைமுழங்கு போர்த்தானைச்
செங்கட் சினமால்
கணைமாரி பெய்த களத்து.

[நாஞ்சில்-கலப்பை. ஞாலம்—நிலம். களிறு-யானை. சேர்ந்த—சேர்ந்தன. பல்-பல. பணை-முரசு. தானை-சேனை. செங்கண் சினமால்-அருளாளரான விஷ்ணுவே கோபாவேசம் கொண்டதுபோலத் தோன்றிய கோச்செங்கட் சோழர். கணை-அம்பு. மாரி-மழை.]

மழை பெய்ததும் நிலத்தை உழுகிருேமல்லவா? தந்தங்களை ஊன்றி மரணவஸ்தையில் நிலத்தை உழுதுகொண்டிருக்கும் யானைகள் வெள்ளிக் கலப்பையால் நிலத்தை உழுவதுபோலக் காண்கின்றனவாம். இப்படி உழவை உபமானமாக்குவது போரின் கொடுமைகளை எவ்வளவு பயங்கரமாக எடுத்துக் காட்டுகிறது?

யானைகளுக்கருகே செவிசாய்த்துக் கிடக்கும் குதிரைகள் பூமிதேவி ஏதோ மந்திரம் உபதேசிக்க அதைக் கேட்பதுபோலக் கிடக்கின்றனவாம். சிவபக்தரான சோழமன்னருக்கு இந்த உபமானம், எத்தகைய உணர்ச்சிகளைக் கிளறிவிட்டிருக்க வேண்டும்! சிவகுரு காதில் மந்திரோபதேசம் செய்வதும் ஞாபகத்திலே பாய்ந்துவரக்கூடுமல்லவா? எத்தனை கோர பயங்கரங்களுடன் அந்த இரத்தக் காடும் பிணக்காடுமான போர்க்களம், சந்தோஷ ஆரவாரங்களையும் கொண்டாட்டங்களையும் தாண்டிக் கொலு மண்டபத்திற்குள்ளே வந்து விட்டது!

இப்படிப் போர்க்களம் பாடும் பாடல்கள் 'களவழி நாற்பது' என்று பெயர் பெறுகின்றன. புலவர் பெயர் பொய்கையார், இவர் வேறு, பொய்கையாழ்வார் வேறு. இந்தப் பொய்கையாரின் அரசனை சேரமன்னனேடுதான் சோழமன்னர் போர் செய்தார், தோல்வியுற்ற சேரனைச் சோழ மன்னர் சிறையில் வைத்திருந்தார். அந்தப் போர்க்களத்தையும், எதிரியான சோழ மன்னரின் வெற்றிச் சிறப்பையும் பாடி, வெற்றி வீரரை மகிழ்வித்துத் தம்முடைய அரசனை விடுவித்துக்கொண்டார் பொய்கையார். 'களவழி'யில் போரின் கொடுமைகளை விளக்கி, 'அருள் வழியே நல்ல வழி' என்பதைக் குறிப்பாக உணர்த்தியிருக்கிருர்.

இவ்வளவு போர் வெறியும் கொலை-வழியும் இந்த அரசர் பெருமானின் பூர்வாசிரமம் என்றுதான் சொல்லவேண்டும். அருளாளரான பொய்கையாரை அறிந்து கொண்டபின் கோச்செங்கட் சோழரும் அருளாளராகிவிட்டார் என்று ஊகிக்கலாம். வீரருள் வீரரான இச்சோழ பெருமான் சிவபக்தராகவும்இருந்தார். பொய்கையாரின் நட்பு இந்த அரசருக்கு ஒரு புதிய விழிப்பையும வைராக்கியத்தையும் உண்டுபண்ணியிருக்கக்கூடும். இந்தப் புதிய விழிப்பு நிலையிலே இந்த அரசர் சேக்கிழார் சொல்லுகிறபடி சிவாலயங்கள் கட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்;

பூத நாதன் தான் மகிழ்ந்து
பொருந்தும் பெருந்தண் சிவா
லயங்கள்
காத லோடும் பல எடுக்கும்
தொண்டு புரியும் கடன்பூண்
டார்.

[பூத நாதன்—சிவபெருமான்.]

திருவானைக்காவிலே தாம் சிலந்தியாக அருள் பெற்றதை உணர்ந்து கோயில் கட்டுவித்தாராம். தம் அமைச்சர்களை ஏவிச் சோழநாட்டில் வெவ்வேறிடங்களிலும் சிவாலயங்கள் கட்டுவித்து, அக்கோவில்களில் கட்டளைகளும் முறைப்படி அமைத்தார். பின்பு சிதம்பரம் அடைந்து நடராஜ தரிசனம் செய்து தில்லைவாழ் அந்தணர்களுக்கும் மாளிகைகள் கட்டுவித்தார். இப்படியெல்லாம் தொண்டுகள் பல செய்தவண்ணம்.

திக்கனைத்தும் தனிச் செங்கோல்
முறை நிறுத்தித் தேர்வேந்தர்

'தில்லைவேந்த'ரான நடராஜப் பெருமானின் திருவடி சேர்ந்தார் என்கிருர் சேக்கிழார்.

இந்தச் சோழமன்னர் இப்படியெல்லாம் சிவாலய கைங்கரியங்கள்பல செய்தார் என்பதற்குத் திருமங்கையாழ்வாரும் சான்று தருகிருர்.

முட்டைக்குள் முட்டை!



ஸெயிண்ட்லூயி என்றவிடத்தில் பிரட்போல்மான் என்ற விவசாயி வழக்கத்துக்கு விரோதமாக ஒரு முட்டை மிகப் பெரிதாக இருப்பதைக் கண்டு அதை உடைத்துப் பார்த்தார். உடைந்த முட்டைக்குள் இன்னொரு முட்டையிருந்தது! அவருக்கு இது ஒரே வியப்பைத் தந்தது. அவருக்கென்ன? படத்தைப் பாருங்கள். பென்ஸிலால் சுட்டிக்காட்டப்படும் முட்டையைப் பார்க்கையில் நமக்கும்தான் வியப்பேற்படுகிறது!

இருக்கிலங்கு திருமொழிவாய்
எண்தோள் ஈசற்(கு)
எழில்மாடம் எழுபது செய்(து)
உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன்
சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம்
சேர்மின் களே

[இருக்கு-முதல் வேதமாகிய ருக்வேதம். ஈசன்-சிவபெருமான். எழில்மாடம்-(இங்கே) மேட்டிடத்தில் கட்டிய அழகான கோயில்கள்.]

திருமங்கையாழ்வாரின் குறிப்பிலிருந்து, சிவபெருமானுக்கு இந்தச் சோழமன்னர் எழுபது கோயில்கள் கட்டினார் என்று தெரிகிறது. மேலும் இச்சோழ மன்னர் திருநரையூர்ப் பெருமானிடத்திலும் பக்தியுள்ளவராக இருந்தார் என்றும் தெரிகிறது.

நம் 'பெரிய திருமொழி'யில் திருமங்கையாழ்வார் இந்தச் சோழ மன்னரின் இந்த விஷ்ணு பக்தியை,

செங்கணான் கோச்சோழன்
சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம்
சேர்மின் களே

என்றும்,

செழும்பொன்னி வளம்
கொடுக்கும்
சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம்
சேர்மின் களே

என்றும் பாடியிருக்கிறார். திருமங்கையாழ்வார் வாக்கிலிருந்து, சேக்கிழார் பாடியிருக்கும் கோச்செங்கட் சோழநாயனாரே விஷ்ணு பக்தராகவும் விளங்கினாரென்றும் தெரிகிறது.

மதத்துவேஷமில்லாமல் பாகவதாபிமானியாகவும் விளங்கிய இந்த நாயனாரைச் சிவநேசச் செல்வர்களின் தலைவரான திருஞான சம்பந்தரும் பாராட்டியிருக்கிறார்.

தென்னவனாய் உலகாண்ட
செங்கணாற்(கு) அடியேன்

என்று சுந்தரமூர்த்தி சுவாமியும் இவரைப் போற்றியுள்ளார்.

ஆழ்வாரும் பாராட்டும் நாயனார் சிறந்த சிவபக்தராக இருந்ததோடு விஷ்ணு பக்தராகவும் இருந்தார். இது கோச்செங்கட்சோழ நாயனாரின் சிறப்பியல்பு என்று சொல்லலாம்.



கலாபதி சொன்ன கதை

—ப. ராதாகிருஷ்ணன்—

[சென்றவாரத் தொடர்ச்சி]

“நண்பரே! உமக்கு விளையாட்டாகத் தோன்றுகிறது எல்லாம். ஆனால் என் மனோநிலை வேறு. அதை நான் எங்ஙனம் வர்ணிப்பேன்! சுருங்கச் சொன்னால் நான் ஒவ்வொரு நிமிஷமும் அவ்வாவியின் கையில் மரணத்தை எதிர்பார்த்திருக்கிறேன். அது இங்கு வந்திருப்பதே என்னைப் பழி தீர்த்துக்கொள்ளும் பொருட்டுத்தான். அதில் ஐயமில்லை. நான் என் இளம்பிராயத்தில் அறியாமற் செய்துவிட்ட ஒரு பெருந்தவறின் பலன் என்னையடைய இத்தனை வருஷங்களாகக் காத்திருந்தது. இதோ நானே அதனிடம் வலிய வந்து அகப்பட்டுக்கொண்டுவிட்டேன். இனித் தப்ப வழியில்லை. களங்கமற்ற மனத்துடன், என் குருவின் உயிர்பிழைக்கச் செய்ய வேண்டுமென எண்ணி நான் செய்த ஒரு முட்டாள்தனமான காரியம் அது. நான் விரும்பியதற்கு நேர்மாறான முடிவையளித்து அவருயிரை வாங்கியது.........”என்று ஒரு பெருமூச்சுடன் சற்று நிறுத்தினார் அவர். நான் ஒன்றும் புரியாமல் அவர் முகத்தை நோக்கி விழித்துக்கொண்டிருந்தேன். என் கண்ணெதிரில் பக்கத்துப் பங்களாவில் வெகு சாவதானமாக உட்கார்ந்திருந்தது ஒரு ஆவி. பக்கத்தில் நிற்கும் நண்பரோவென்றால் இப்போதுதான் ஒரு கதையைத் தொடங்குகிறார். இவ்விரண்டில் எதைக் கவனிப்பதென்றே எனக்குப் பிடிபடவில்லை.

“......என் வாழ்க்கையின் முக்யமான ரகசியம் இது ஒன்றுதான். மரணத்தின் வாயிலில் நின்றுகொண்டு உம்மிடம் இதை வெளியிடுகிறேன். நீர் என்னைப்பற்றி என்ன நினைத்துக்கொள்வதாயினும் சரி, நான் குற்றமற்றவனென நீர் எண்ணவேண்டும் என நான் உம்மை வற்புறுத்தவில்லை.

இன்றைக்கு இருபது வருடங்களுக்குமுன் இதே தினத்தில் நடந்த சம்பவம் அது. என் குருவும், தந்தையினும் மேலாக என்னை நேசித்து வந்தவருமான இந்தப் புரொபஸரும் இதே பங்களாவில் தான் தங்கியிருந்தோம். அவர் மஹா நிபுணத்வம் வாய்ந்த ஒரு விக்ஞானி. ஆனால் பெயர் புகழ் ஒன்றையும் விரும்பினவரல்ல. கலையில் ஈடுபட்டு அக்கலையாராய்ச்சியின் பொருட்டாக இல்லற வாழ்வையே தியாகம் செய்து இறுதிவரை ஏகாங்கியாகவே காலங்கழித்தவர். உலகத்தில் அவருக்கு உற்ற துணைவன் நானொருவன்தான். முழுமூடனாகவிருந்த என்னை ஊக்குவித்துப் பல அரும்பெரும் விஷயங்கள் கற்பித்து முன்னுக்கு வரச்செய்தவர் அவரே. சிறிது காலமாக உடல் நலங்குன்றியிருந்த அவர் இந்தப் பங்களாவை விலைக்கு வாங்கி இங்கே வந்து தங்கினார். கூடவே நானும் இருந்தேன்.

அவர் ரஸாயனக் கலையில் பெரும் அனுபவ முதிர்ச்சி பெற்று பற்பல பிணிகளைப் போக்கும் ஔஷதங்களைக் கண்டு பிடித்தார். அம்மருந்துகளால் பயன்பெற்ற உலகம் அவரை வாழ்த்தியது. ஆனால் அவரே நோய் வாய்ப்பட்டுத் தத்தளித்தபோது அவர் விஷயத்தில் ஒரு மருந்தேனும் பலனளிக்கவில்லை. பற்பல பிரபல வைத்தியர்கள் வந்து பார்த்துக் கைவிட்டுச் சென்றனர். அல்லும் பகலும் நான் அருகிலிருந்து வேண்டிய சிசுருஷைகளைச் செய்தேன். ஆயினும் விதியை வெல்ல யாரால் முடியும்? நாளுக்கு நாள் இன்னும் மோசமாகி வந்தது அவர் உடல் நிலை. அவர் பிழைத்தெழவேண்டுமென எனக்கிருந்த கவலை சொல்லத்தரமன்று.

திடீரென என் மனதில் ஒரு புது யோசனை தோன்றியது. அது எத்துணை பேதமையானதென்று எனக்கு அப்போது தெரியவில்லை. பின்புதான் உணர்ந்தேன். எனக்கிருந்த அற்ப சொற்ப மருத்துவ நூலறிவைக் கொண்டு நானாக ஒரு புது மருந்து தயார்செய்ய முற்பட்டேன். அதைக்கொண்டு என் குருவின் உயிரைக் காப்பாற்றிவிடலாமென்ற நம்பிக்கை எனக்கு. அம்மருந்து கலக்கவேண்டிய மூலவிதி (Formula) எனக்கொன்றும் தெரியாது. என்றாலும் உத்தேசமாகக் கலந்தேன்.

ஒரு இம்மியளவு அதிகரித்தாலும் நிச்சய மரணத்தைக் கொடுக்கக்கூடிய கடும் பாஷாணங்கள் கலந்திருந்தன அதில். இறைவனை நம்பி அம்மருந்தை எடுத்துச் சென்று என் குருநாதரின் அறையை அடைந்தேன். அவரிடம் இதைப்பற்றிச் சொல்லவும்கூட என் மனம் துணியவில்லை. சொன்னாலும் அதைச் சரியாகப் புரிந்துகொண்டிருக்கக்கூடிய நிலையில் அவர் இல்லை.

படுக்கையில் அலங்கோலமாகக் கிடந்த அவரது தலையைத் தூக்கி என் மடியில் வைத்துக்கொண்டு மருந்தை அவர் வாயில் ஊற்றினேன். ‘கடகட’ வென்று உட்

சென்றது மருந்து. மெல்லத் தலையைத் தலையணைமீது ஒழுங்காகக் கடத்திவிட்டு வெளியே வந்தேன். அவ்வளவு மூடத்தனமான செய்கை முடிந்து பின்னரே என்னைப் பயமும் கவலையும் வந்து சூழ்ந்துகொள்ளத் தொடங்கின. என் மருந்தின் முடிவு யாதாயிற்றோ என்ற அச்சந்தான்.

சிறிது நேரம் கழித்து என் குருநாதரின் படுக்கையறைக்குச் சென்றேன். அவர் நித்திரையிலாழ்ந்திருப்பது போற் காணப்பட்டார். நெருங்கிப் பார்த்தேன். என் இதயமே 'சட்'டென்று நின்றுவிட்டது. அவரது தூக்கம் மீளாத்தூக்கமென்பது உணர்ந்த பின் அழுதேன், அரற்றினேன். பயனென்ன? இறந்தவரை அடக்கம் செய்தோம். அவரது பூதவுடல் மறைந்த பின்னரே, அவரது அருமை இன்னும் பதின்மடங்காகித் தோன்றியது. எனக்குத் தெரியாமலே இந்தப் பங்களாவையும் இதைச் சேர்ந்த இதர சொத்துக்களையும் பாங்கியில் ஆயிரக் கணக்கான பணத்தையும் என் பேருக்கு உயில் எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தார் என் குருதேவன்.

உலகம் என்னைச் சந்தேகிக்கவில்லை. ஆனால் என் மனச்சாட்சி என்னைக் குத்தியது. அன்று இவ்விடத்தை விட்டுக் கிளம்பியவன் தான். உலகமெங்கும் சுற்றிவிட்டு இப்போதுதான் திரும்பி வருகிறேன். இன்னும் சற்றுப் பொறுமையாய் இருந்திருந்தேனானால் என் குருநாதர் ஒருகால் பிழைத்தெழுந்திருப்பார். ஆனால் அதற்கு அனுமதிக்கவில்லை என் அவசர புத்தி. அதற்குரிய தண்டனையும் இதோ காத்துக்கொண்டிருக்கிறது........." என்றார் விஞ்ஞானியார். முந்தியதைவிட நீண்ட ஆழ்ந்த பெருமூச்சொன்று அவர் நெஞ்சினின்றும் கிளம்பி மழையின் சப்தத்தை ஊடுருவியது. என் பார்வை அவரது வெளிறிக் கிடந்திருந்த முகத்திற்கும், அந்த எதிர்ப்பக்கத்து ஜன்னலருகிலமர்ந்திருந்த அவ்வுருவத்திற்குமிடையில் மாறி மாறித் திரும்பியது. என்றாலும் வாழ்க்கையில் தான் அத்துணை தூரம் நேசித்து வந்த தம் சிஷ்யனை அவன் அறியாமற் செய்த தவறுக்காக மன்னிக்கமாட்டாரா அந்தப்புரொபஸர்—அதாவது புரொபஸரின் ஆவி?' [என்றுதான் நான் சிந்தித்தேன்.



இப்போ நாங்கள் மேலும் அச்சமுறக்கூடிய சம்பவம் ஒன்று நடந்தது. அது வரை சூக்ஷ்ம தரிசினியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த அவ்வுருவம், ஒரு முறை நிமிர்ந்து நோக்கியது. உடனே எழுந்து நின்றது. அது எங்களைப் பார்த்துவிட்டதென்பதில் ஐயமில்லை. ஏனோ என் குலை நடுங்கியது. விஞ்ஞானி நண்பரோ நகரக்கூடிய நிலையிலேயே இல்லை. வாய் திறந்து கூச்சல் கூடப் போட முடியாமல் ஸ்தம்பித்து நின்றார். ஆனால் மறுகணம் நிகழ்ந்த அற்புதத்தை என்ன சொல்லுவேனடா சுந்து! சுமார் ஐம்பது கஜதூரத்திற்கப்பால் நின்ற அவ்வுருவம் கண்மூடிக் கண் திறக்குமுன் எங்கள் எதிரில் நின்றது. அது மட்டுமா? வெகு சகஜமான சிரித்த முகத்துடன் நமது விஞ்ஞானியாரை நோக்கி, "என்ன ஆர்யா! சுகமா?" என்று விசாரித்து விட்டுத் தன் கைகளை நீட்டி அவருடன் கை குலுக்கியது. நான் வெல வெலத்துப்போய் நிற்பதைக் கண்டதும் என்னிடமும் ஒரு புன்னகையுடன் கை நீட்டியது. தன்னையறியாமலே நானும் அதைப்பிடித்துக் குலுக்கினேன்.

"என்ன ஆர்யா. இருபது வருஷங்களுக்கு முன் நான் பூதவுடலில் இருக்கும்போது. உன்னைப் பார்த்ததுதான். இப்போதுதான்

மறுபடி பார்க்க முடிந்தது. சற்று முன்தான் நான் வந்தேன். இன்று தான் நான் இறந்த தினமென்று உனக்கு ஞாபகமிருக்குமே. நான் வந்த சமயம் நீ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாய். நீ அரைகுறையாய் விட்டு வைத்திருந்த ரஸாயனப் பரிசோதனையைப் பூர்த்தி செய்து பார்க்கவேண்டுமென்று எனக்குத் தோன்றியது. முதலில் அதை முடித்துவிட்டு அப்புறம் உன்னை எழுப்பிக் காட்டலாம் என்று எண்ணினேன். நீ என்னடா என்றால் நான் அதில் ஈடுபட்டிருக்கும் சமயம் பார்த்து வெளியே கம்பி நீட்டிவிட்டிருக்கிறாய். ஏன்? உனக்கு என்னைப்பார்ப்பதற்கே பயமாயிருக்கிறதா?'' என்று பரிவுடன் வினவியது அவ்வுருவம்.

என் நண்பரின் பயம் மறைந்தது. அதற்குப்பதிலாக அவர் கண்களினின்றும் நீர் தாரை தாரையாய்ப் பெருகியது. உணர்ச்சி வேகத்தில் அவ்வுருவத்தின் முன்னால் மண்டியிட்டார். கைகளைக் கூப்பினார். "என் குரு நாதரே! என்னை மன்னித்து விட்டீர்களா? தங்கள் மரணத்திற்கு நான்தான் காரணமென்றறிந்தும் என்னிடம் தங்களன்பு குன்றவில்லையா?......'' என்று புலம்பினார். அவ்வுருவத்தின் முகத்தில் தவழ்ந்துகொண்டிருந்த புன்சிரிப்பு பெருஞ் சிரிப்பாக மாறி 'கடகட'வென்று ஒலித்து என் மயிர் சிலிர்க்கச் செய்தது. அந்தச் சிரிப்பு ஓயச் சிறிது நேரம் பிடித்தது. "என்னடா இது. பிசாசு இப்படிச்சிரிக்கிறதே'' என்று எண்ணி அதிசயித்தேன்.

"ஆர்யா! நீ என்ன வெறும் பைத்தியக்காரனாக இருக்கிறாய்! நீ சொல்வதைப்பார்த்தால் இத்தனை வருடகாலம் நீ ஒரே பச்சாத்தாபத்திலேயே கழித்திருக்கிறாயென்றல்லவா தோன்றுகிறது. பயப்படாதேயப்பா. உன் மனதிலிருப்பதெல்லாம் எனக்கு முன்பேயே தெரியும். ஆனால் நீ செய்ததில் தவறொன்றுமில்லை. நான் உன் மனத்தைச் சோதிக்கத்தான் எண்ணினேன். மரணப் படுக்கையில் நீ புகட்டிய மருந்தைச சாப்பிடும்போது எனக்குப் பிரக்ஞையில்லையென்பது உண்மைதான். ஆனால் இப்பூதவுடல் பிரிந்ததும், தான் நடந்தவற்றைச் சூக்ஷ்ம திருஷ்டியால் உணர்ந்துகொண்டேன்.

"உண்மை இது தான். நீ கொண்டுவந்த மருந்தில் பாஷாணக் கலப்பு அளவுக்கு மீறி பாஷாண வஸ்துக்கள் இருந்தனவென்பதை நீ அறியவில்லை. உன் நல்லெண்ணத்தைப்பற்றி எனக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது. ஆனால் உன் மருந்தினால் என் உயிர் பிரியவில்லை. என் மரணம் இயற்கையானது. நோய் முற்றியே மரித்தேன். சுருங்கச் சொன்னால் நீ என் வாயில் ஊற்றியது நீ கொண்டுவந்த மருந்தேயல்ல. அது நான் வழக்கமாய்ச் சாப்பிட்டு வந்த மருந்துதான்.'' என்றது அவ்வுருவம்.

"ஆ! அது எப்படி?'' என்று ஏககாலத்தில் கூவினோம் நானும், விஞ்ஞானி நண்பரும். எங்களது பயம் அநேகமாய்த் தெளிந்துவிட்டது.

"சொல்லுகிறேன் கேளுங்கள். ஆர்யா! என் படுக்கைக்குப்பக்கத்தில் மருந்துகள் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு மேஜை உனக்கு நினைவிருக்கிறதா? அது ஒரு சுழல் மேஜை. படுத்தபடி கையைநீட்டிச் சாமான்களை எடுத்துக்கொள்ள வசதியாக அது அங்கே போடப்பட்டிருந்தது. அதன் மேல் நீ கொண்டுவந்த மருந்தை வைத்துவிட்டு உன்கையால் என் தலையைத் தூக்கி உன் மடியில் வைத்துக் கொண்டாய். பின்பு நீ வைத்த



"ஏண்டா பையா. என்னுத் துக்குடா துட்டு கேக்கறே? பீடி கீடி பிடிக்கிற கெட்ட வழக்கம் உண்டா?"

"சத்தியமா அதெல்லாம் கிடையாதுங்க. நான் ஸிக ரெட்டுத்தானுங்க சாமி எப்போதும் பிடிக்கிறபளக்கம்!"

இடத்திலிருந்து அந்த மருந்து அடங்கிய கண்ணுடிக்கோப்பை யை (அவுன்ஸ் க்ளாஸ்)எடுத்தாய். ஆனுல் நீ வைத்த கோப்பை அது வல்ல. நீ என் தலையைத் தூக்கும் போது தவறுதலாய் உன் கை பட்டுச் சுழன்றிருந்தது அந்தச் சுழல் மேஜை. அதன் எதிர்க்கோடியில் நான் வழக்கமாய்ச் சாப்பிடும் மருந்து வேறொரு கண்ணுடிக் கோப்பையில் வைக்கப்பட்டிருந்தது. உறங்கி விழித்ததும் நான் சாப்பிடுவதற்குத் தயாராய் நம் வேலையாள் அதை அங்கே ஊற்றி வைத்துவிட்டுப் போயிருந்தான். மேஜை சுழன்றதும் உனக்குத் தெரியாது. மருந்து மாறினதும் உனக்குத் தெரியாது. கண்ணுடிக் கோப்பைகளிரண்டும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவும் மருந்துகளிரண்டும் ஒரே நிறமாகவுமிருந்தபடியால் நீயும் உன் தவறைக் கண்டு கொள்ளவில்லை. எனவே கடைசியில் என் வாய்க்குள் சென்றது தீங்கற்ற மருந்துதான். அதைச் சாப்பிட்ட சற்று நேரத்திற்கெல்லாம் நான் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மரணம் கிட்டியது. 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது' என்றமாதிரி நீ அதை எப்படியோ எண்ணிக்கொண்டு விட்டாய்" என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரிக்கத் தொடங்கியது புரொபஸரின் ஆவி.

அப்புறம் என்ன? எங்கள் வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை. குருவும், சிஷ்யனும் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டனர். என்னை நோக்கி அந்த ஆவி என்ன சொல்லிற்று தெரியுமாடா சுந்து? "நீரும் ரொம்ப நல்ல மனிதராகக் காணப்படுகிறீர். ஆனுல் உமக்குக் கல்வியறிவில் அதிக விருப்பம் கிடையாதென்று நான் சந்தேகிக்கிறேன். நீரும் எங்களைப்போல் விக்ஞானத் துறையில் பிரவேசித்துக் கொஞ்சம் உலகிற்கு உதவக் கூடாதா? என் சிஷ்யர் ஆர்யா உங்களுக்கு அத்துறையில் வேண்டிய உதவி செய்வான்." என்றது. ஆர்யாவும் தலையை ஆட்டினுர். என் மனதில் சபலம் தட்டியது.

"ஆகட்டும். நானும் உங்களைப் போல் விக்ஞானக் கலையின் வளர்ச்சியின் பொருட்டு என் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்துவிடுகிறேன்." என்று சங்கல்பம் செய்துகொண்டுவிட்டேன். அந்த ஆவியின் சந்தோஷத்திற்களவில்லை. அந்தமகிழ்ச்சிப் பெருக்காலேயே அந்த ஆவி ஆவியாய்ப் போய்க் காற்றில் மறைந்துவிட்டதடா! அதுமுதல் நானும், அந்த விக்ஞானி ஆர்யாவும் இணைபிரியா நண்பர்களானேம். பல விக்ஞான ஆராய்ச்சிகளை நடத்திப் பார்த்தோம். ஆனுல் இப்போது நீலகிரியில் குளிரதிகமாகி விட்டது. கோடைகாலம் போய்விட்டதல்லவா? அதனுல் கொஞ்சநாள் இங்கேயே வந்திருந்து, என் வீட்டிலேயே ரஸாயனச் சோதனைகளை நடத்தலாமென்றுதான் வந்திருக்கிறேன்." என்று முடித்தான் கணபதி.

"ரொம்ப ஸந்தோஷம்டா கணபதி. உன் சோம்பலைப் போக்கடிக்கக் கேவலம் மனிதனுல் முடியாதென்றெண்ணிக்கொண்டிருந்தோம். நல்லவேளை! ஒரு பிசாசாவது வந்து உன்னைத் திருத்தியதே." என்று அவன் முதுகில் தட்டிக்கொடுத்தேன்.

ஆனுல் என் உள்ளம் மட்டும் எண்ணமிட்டது. "இந்தக் கணபதி சொல்வது உண்மையாயிருக்குமா? உண்மையில்லாவிடில் இவ்வளவு கற்பனு சக்தியுடன் இவனுல் எப்படிப் புளுக முடிகிறது?" என்று.



"ஏண்டா கச்சு! பாட புஸ்தகங்களைப் படிக்காமே எப்போ பார்த்தாலும் பத்திரிகைகளையே படிச்சிண்டிருக்கியே, பெரியவனு ஆனப்புறம் என்ன பண்ணப் போறேன்னு தெரியலையேடா......"

"சிறுவர் பத்திரிகை ஒண்ணு ஆரம்பிச்சுடறேன் அப்பா! நீங்க கவலைப்படாதேங்கோ......"

நாமொன்று நினைக்க.....!

ய. மகாலிங்க சாஸ்திரி எம்.ஏ.பி.எல்.

ஹெட்மாஸ்டர் வீட்டில் சிவராமனுக்கு ஜவாப்புச் சொன்ன பையன் கி. முத்துஸ்வாமிதான் என்பதை வாசகர்கள் ஊகித்திருக்கலாம். முத்துஸ்வாமி அங்கிருக்கக் காரணம் என்ன என்ற கேள்விக்குப் பதில் அறிய நாம் சில நாட்களுக்கு முற்பட்ட சில விருத்தாந்தங்களை ஆராய்வது அவசியமாயிருக்கிறது. முத்துஸ்வாமி தன் பந்துவான சிவஸ்கந்த சர்மா வுடன் தனிவீட்டில் இருந்ததாய்க் குறிப்பிட்டோம் அல்லவா?

சிவஸ்கந்தசர்மா வசித்த வீட்டிற்கு நேர் எதிர் வீட்டில் வெளியூரிலிருந்து ஒரு பிரபு தன் சரீர சிகித்ஸைக்காக வந்திருந்தார். அவருக்குச் சிச்ருஷைக்கு வந்திருந்த அவருடைய பெண் கமலி ஒரு பால்யவிதவை.

சர்மா ஆறடி உயரமும் சிவந்த நிறமும் பரந்தமார்பும்; நல்ல முகப்பொலிவும் உள்ள திடமான வாலிபன். அவன் வயது இருபத்தியாறு ஆகியும் விவாகமாகாதவன். எதிர்த்த வீட்டில் சூர்யநாராயண ஐயர் குடி வந்து சில தினங்கள்வரையில் சர்மா, அங்கிருந்துவந்த முக்கல் முனகல் த்வனிகளையும் டாக்டர் வந்து போவதையும் வேலையாட்கள் அடிக்கடி ஸைக்கிளை எடுத்துக்கொண்டு வெளிக்கிளம்புவதையும் அறிந்தானே ஒழிய ஒரு பெண் அவ்வீட்டிற்குள் இருப்பதை அறியவில்லை. ஒரு நாள் சர்மா தன் ரூமில் உட்கார்ந்து விசராந்தியாக தூமவிமானங்களை வியாபரிக்கச் செய்துகொண்டிருந்தபோது பக்கத்து வீட்டு ஸ்திரீ சூரியநாராயண ஐயர் ஜாகைக்குள் நுழைவதைப் பார்த்துச் சிந்திக்கலானான். அவன் சிந்தனையாகிற இஞ்சின் ஓட்டத்திற்கு அறிகுறியாக அவன் ஊதிய புகைத்திரள்களின் அடர்த்தியும் தொடர்ச்சியும் விரைந்து விரைந்து விருத்தியடைந்தன. "ஓ! இந்த வியாதிஸ்தர் தேவலையே! பலே ஆளாக இருப்பார்போலிருக்கிறதே! இந்த முப்பது வயது சுந்தரியின் உறவை எப்போது பிடித்தார்! சரி. இதை ஸி. ஐ. டி. பண்ணி ஆசாமி குட்டை வெளிப்படுத்திவிட வேண்டும். வியாதி சொஸ்தமாகிவிட்டதோ? அல்லது இந்த அம்மாள் "நர்ஸு" உத்யோகம் பார்க்கிறாளோ? புருஷன் தனியே இருக்கும் வீட்டில் இவளுக்கு என்ன வேலை? ஒருவேளை சொந்தக்காரியாயிருப்பாளோ? அப்படித் தோன்றவில்லையே! நான் சில மாதங்களாக இங்கே குடியிருந்தும் என்பேரில் ஒருவர் திருஷ்டியும் விழவில்லையே! எல்லாம் பணம் செய்கிற வேலை அல்லவா?—" இவ்விதமாகத் தமோமயமான துராலோசனைகளைப் புகைப் படலங்களைப்போல் சுருள் சுருளாக சர்மா சிருஷ்டித்துக்கொண்டு, மதிமயக்கத்திலிருக்கும் போது உள்ளே சென்றிருந்த அம்மாள் ஒரு யுவதியால் வழி கொண்டு வந்து விடப்பட்டு வெளியே வருவதை அவன் பார்த்தான். முப்பது வயது சுந்தரியிடமிருந்து இருபது வயது கட்டழகியிடம் அவன் வெறி பிடித்த கண்கள் சுழலவாரம்பித்தன. "இவள் யார்! இந்த வீட்டிலேயே இருப்பவள் போலிருக்கிறதே! பால்யவயதைக்கவனித்தால் வியாதிஸ்தருக்குப் பெண்ணாக இருக்கலாம் என்றல்லவா தோன்றுகிறது! இவர் தனக்கு உதவிக்குப் பெண்ணை அழைத்து வந்திருக்கிறார்போலிருக்கிறது. இவ்வளவு நாட்களாக என் கண்ணில் இவள் படவில்லையே! இப்போதும் மின்னல்போல் தோன்றி மறைந்துவிட்டாளே! அவள் ஆபரணங்கள் அதிகம் அணியாததை — விசேஷமாய் மூக்கில் ஆபரண சூன்யையாக இருப்பதை—கவனித்தால் ஒருவிதமான சந்தேகத்திற்கு இடமுண்டாகிறது. அவன் எவனோ கொடுத்து வைக்காதவன்! நான் முன்னதாகவே இவளிருப்பதை அறியாததால் இவ்வளவு நாட்கள் வீணாகி விட்டனவே! நம் வீட்டிலிருக்கும் பையன் வெறும் மக்கு! வெறும் அப்பாவி! அவன் மூக்கைப் பிடித்துக்கொண்டுபொழுது விடிந்தாலும் அஸ்தமித்தாலும் உட்கார்ந்து விடுகிறான். எதிர்வீட்டு சமாசாரங்களை விசாரித்து அவ்வப்போது என்னிடம் சொல்லக்கூடாதோ? ஒன்றுக்கும் பிரயோசனமில்லாதவனை சாப்பாடு போட்டு வைத்துக்கொண்டிருக்கிறேன்—"

சர்மா அதுமுதல் அதிகம் எதிர் வீட்டு ஜன்னல்கள்.



பிச்சைக்காரி:—அம்மா! தம்பிடி பிச்சை போடுங்களேன்!

ஸ்திரீ பாஸஞ்ஜர்:—சில்லரை இல்லையே! போ!

பி. காரி:—எத்தனைக்கு சில்லரை வேணுங்க! இப்படி கொண்டாங்க!



கதவுகள் இவைகள் பேரில்கவனம் செலுத்தலானான். மாடியில் நோயாளி படுத்திருந்ததாகத் தோன்றியபடியால் சர்மா தன் வீட்டு மொட்டை மாடியில் காலை மாலைகளில் உலாத்துவதை ஒரு முக்கிய காரியமாக வைத்துக் கொண்டான். சீட்டியடித்தல், சினிமாப்பாட்டுக்களின் அடியைத் தொட்டு ஆவர்த்தி செய்தல், உரத்த குரலில் முத்துசாமியை மாடியிலிருந்தபடி கூப்பிட்டு அதிகாரம் செய்தல் முதலிய சேஷ்டைகளை விஸ்தரிக்கலானான். எதிர் வீட்டு மாடியின் ஜன்னலுக்கு நேராக நின்றுகொண்டு கண்ணாடி பார்த்துத் தலை சீவிக் கொள்ளுதல், பொட்டிட்டுக் கொள்ளுதல், வாஸனைப் பூச்சுக்களைப் பூசிக்கொள்ளுதல், நியூஸ் பேபர் படித்தல், புகைவிடுதல் முதலிய நாகரிக நாஸூக்குகளில் அதிகநேரம் செலவழிக்கலானான்.

இவ்வளவு சிரமப்பட்டும் சர்மாவுக்கு எப்போதாவது நிழலோட்டம்போல் உள்ளே ஒரு உருவத்தின் அசைவுமட்டும்தான் பிரத்யட்சமாயிற்று. அவன் அன்று மின்னல் தோன்றி மறைந்ததுபோல் கண்ட காட்சியை மனதில் நிலை நிறுத்திக்கொண்டு அசையும் நிழலையும் ஊகிக்கப்படும் கால் ஓசைகளையும் கேட்கும் மெல்லியமொழிகளையும் அத்துடன் சம்பந்தப்படுத்தி மனோரதத்தை வளர்க்கலானான். அவன் தானே பேசிக் கொள்வதும் தூக்கத்தில் ஆசைக் கனவுகள் கண்டுகொண்டு பிதற்றுவதும் சகஜமாயிற்று. முத்துசாமி இதையெல்லாம் கவனிக்காமலில்லை. சர்மாவின் போதை ஏற ஏற அவனுக்கு அங்கு இருப்பது முள்மேல் வாஸமாயிற்று. அஸத்து சகவாஸத்தை ஒழித்து விடவேண்டியது சீலத்திற்கு இன்றியமையாதது என்று அவன் நன்கு உணர்ந்தான். ஆனால் எங்கு போகிறதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

இந் நிலைமையில் சர்மா ஒருநாள் அக்கம் பக்கத்துச் சிறுமி ஒருத்தியை அதிக அன்புடன் அழைத்து வைத்துக்கொண்டு, அவளுக்குத் தின்பண்டங்கள், விளையாட்டுக் கருவிகள் எல்லாம் கொடுத்து அவளுடன் தமாஷ் செய்துகொண்டிருந்தான். அதைக்கண்ட முத்துஸ்வாமிக்குக் காரியம் முற்றுகிறது என்ற எச்சரிக்கை ஏற்பட்டது. சில தினங்களில் அச்சிறுமி எதிர் வீட்டிற்குப் போவதும், அங்கிருந்து சர்மாவிடம் வருவதும் கவனிக்கத்தக்கதாயிற்று.

ஒரு இரவு சர்மா வெகு நேரம் தூக்கமில்லாமல் மேஜையின் கீழ் எழுத்து வேலையில் ஆழ்ந்திருப்பதை முத்துஸ்வாமி கவனித்தான். மறுநாள் சர்மா பாடிக் கொண்டே எதையோ வாசிப்பதையும், தானே அதை ரஸித்து ஆனந்திப்பதையும் பார்த்தான். அடிக்கடி ஒரேமாதிரியான இசையும் ஓசையும் காதில் விழுந்து கொண்டிருந்தன. முத்துஸ்வாமி வருவதைப் பார்க்கும்போது சர்மா த்வனியைக் குறைப்பதும் காகிதத்தை மறைப்பதும், சம்பந்தமில்லாத ஏதாவது ஒரு விஷயத்தைக் குறித்துக் கடுகடுப்புடன் சப்தம் போடுவதும் சந்தேகாஸ்பதமயிருந்தது. அன்று சாயங்காலம் முத்துஸ்வாமி பள்ளிக்கூடத்திலிருந்து சற்று முன்னதாகவே வீடு வந்து சேர்ந்தான். சர்மாவின் மேஜைக்கு அவன் கால்கள் அவனை இழுத்தன. அவன் கண்கள் மேஜையின் பேரில் ஒரு குறிப்பிட்ட காகிதத்தைத் தேட பிரயத்தனப்பட்டன. கைகள் புஸ்தகங்களையும் பேபர்களையும் புரட்டிப் பரிசோதிப்பதில் முனைந்தன.—'ஆ! இது என்ன! 'நண்டு விடு தூது' என்ற புத்தகத்தில்! பாட்டுக்கள் போலிருக்கின்றனவே!''

முத்துஸ்வாமி அக்கையெழுத்துப் பிரதியை உற்று நோக்குமுன் சர்மா வீடு வரும் ஸைக்கிள் சத்தத்தைக் கேட்டு விரைவில் அக்காகிதத்துடன் தன்னிருப்பிடத்திற்கு நழுவிவிட்டான். அன்றிரவு தான் படித்துக்கொண்டிருந்த ஸ்கூல் லைப்ரரிப் புத்தகமான நாட்டு வளமும் செய்நேர்த்தியும் என்ற புத்தகத்திற்குள் அக்காகிதத்தை ஒளித்து வைத்துக்கொண்டு சிறிது சிறிதாய் அதில் வரையப்பட்டிருந்த கவிதையைப்படித்துப் பார்த்தான்.

சர்மா பி. ஏ. வரைத் தமிழ் படித்தவனாதலாலும், தமிழ் கவிதைகளை அடிக்கடி உத்ஸாகத்துடன் படித்து வந்ததினாலும் பாக்களை இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தான். முத்துஸ்வாமி சர்மா அக்காகிதத்தைத் தேடுமுன் அதை இருந்தபடி திரும்பி வைத்துவிட வேண்டுமென்று கவலைகொண்டான். ஆனால் பொழுது விடிந்தபின் பழக்கப்படி தன் வீட்டு ஜோலி பள்ளிக்கூட ஜோலிகளில் ஈடுபட்டிருந்தபடியால் அவன் தன் விசேஷப் பொறுப்பை ஞாபகம் வைத்துக்கொள்ளவில்லை. அன்று லைப்ரரிக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டிய **நாட்டு வளமும் செய்நேர்த்தியும்** என்ற கனத்த புத்தகமும் அவசரஜோலிகளின் நடுவே திருப்பிக் கொடுக்கப்பட்டது. அதற்குள் ஒளிக்கப்பட்டிருந்த சர்மாவின் **அகவல்பா** முத்துஸ்வாமியின் ஸ்மரணைக்கு வரவில்லை.

சர்மா தன் கவிதையின் சுத்தப் பிரதியைத் தேடித்தேடிப் பார்த்து அது கிடைக்காததால் எங்கு தவறி வைத்துவிட்டோமோ என்று நினைத்துக்கொண்டு முதல் குறிப்பிலிருந்து மறுகாபி எடுத்து அதனைத் தன் ஸங்கல்பப்படி பிரயோகிப்பதற்குத் தயாராக வைத்துக் கொண்டான். அந்தி நேரத்தில் தன் தூதியான சிறுமியிடம் கொஞ்சம் புஷ்பங்களுக்குள்ளே அதை மறைத்துவைத்துக் கொடுத்து "எதிர் வீட்டு மாமியிடம் இதைக் கொண்டுபோய் கொடு. என்ன சொல்லிக் கொடுக்கிறாய்? 'கோவிலிலிருந்து எங்காத்துக்குப் புஷ்பம் வந்தது. இதை எங்கம்மா உங்களிடம் கொடுக்கச் சொன்னாள்!' என்று சொல்லிக்கொடு. அவாத்து மாமாவுக்குத் தெரியாமே கொடு. அந்த மாமி கீழே இறங்கிவருகிற சமயம் பார்த்துக்கொடு. உனக்கு ஒரு பொட்டலம் **பெப்பிரமிட்டு** வாங்கி வைத்திருக்கிறேன். இதோபார். நீ வீட்டிற்குப் போகும்போது தருகிறேன். ஜாக்கிரதையாய் போய் வா." என்று அவளைத் 'தாஜா' பண்ணி அனுப்பினான்.

பாமா என்ற அந்தச்சிறுமி கமலிக்குக் கைக்கு ஒத்த சிசுருஷை செய்யவும், அவளுடன் துணைக்கு இருக்கவும் அவளுடைய தாயாரால் அனுமதிக்கப்பட்டுக் கொஞ்சகாலமாய் கமலியிடம் வந்து போவதை சர்மா கவனித்துக் கொண்டிருந்தான். சிறுமியான, விவரம் தெரியாத பாமாவைத் தான் கமலியிடம் மதனதூதியாக உபயோகப்படுத்திக் கொள்ள அவன் பிளான் போட்டுக்கொண்டு அவளை சிநேகம் செய்துகொண்டு மெல்ல மெல்ல அவள் விச்வாசத்தைப் பெற்றான். பாமாவுக்கு அடிக்கடி ஹூக்கு, ஸோப்பு, சீப்பு, ப்ரூச், பௌடர், ஸ்நோ, சாக்கட்டி, பொம்மைப் புத்தகம், மிட்டாய் முதலிய திருப்திதரக் கூடிய பரிசுகளை அளித்து வந்தான். இவைகள் இன்னாரால் கொடுக்கப்பட்டவை என்று பாமா கமலியிடம் சிலாகித்துச் சொல்ல நேரலாம் என்று சர்மா எதிர்பார்த்தான். கமலியே ஒரு நாள், பாமா அணிந்துகொண்டிருந்த கிளிப்ரூச்சை 'இது ஏது' என்று விசாரித்ததாய் தெரிந்துகொண்டபோது சர்மாவுக்கு உத்ஸாகம் உச்ச நிலையை அடைந்தது. அன்றுமுதல் எதிர் வீட்டில் வாசல் பக்கமான கீழ் ரூம் ஒன்றில் எப்போதும் அடைபட்டுக்கிடந்த ஒரு ஜன்னல் ஒவ்வொரு சமயம் திறக்கப்படுவதும், அந்த ரூமில் கமலி நடமாடுவதும் புலனாயிற்று. சந்திரன்போன்ற அவள் முகம் தினம் அஸ்தமன சமயத்திற்கு அந்த ஜன்னலில் ஒரு க்ஷணமாவது உதயமாகாமலிருப்பதில்லை. இந்த அனுக்ரஹக இங்கிதத்தால் சர்மாவின் தபஸ் தீவிரமாயிற்று. கார்யஸித்தியில் நம்பிக்கை வந்தது. அவனுடைய கவிதைக்கலை ஆவேசம் பெற்றெழுந்தது. தன் பரிதாப நிலைமையை மிக்கத்தாழ்மையுடன் தெரிவித்துக்கொண்டு அவன் அந்தக்கவிதையில் தன்னை வெந்த உள்ளம் என்று வருணித்துக்கொண்டான்.

பாமா கை நிறையப் புஷ்பங்களுடன் அஸ்தமன சமயத்தில் எதிர் வீட்டில் நுழைந்தாள். வழக்கப்படி கீழ் ரூம் திறக்கப்படும் சமயம் கமலி அங்கு வருவாள் என்று எதிர்பார்த்து சர்மா தூதியை அனுப்பினார். பாமா மாடிப்படியோரமாய் கமலியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு சற்றுத் தயங்கி நின்றாள்.

எதேச்சையாக அன்று சூர்ய நாராயண ஐயர் கம்பை ஊன்றிக் கொண்டு கீழே இறங்கி வந்தார். பாமா ஏதோ சாமானைக் கை கொள்ளாமல் வைத்துக்கொண்டு அவஸ்தைப்படுவதாக அவர் கண்ணில் பட்டது "அது என்ன குழந்தை?" என்று அனுதாபத்துடன் வினவினர். பாமா— "பூக்கொண்டு வந்தேன். பின்னிக்க வேணும். மாமி எங்கே?" என்ருள்.

ஐயர்— "மாமி மாடியிலிருக்கிருள்" என்று சொல்லிவிட்டு இறங்கும்போது பாமா கூண்டிலிருந்து விடுபட்ட எலிபோல் ஒரே பாய்ச்சலாய் மாடிப் படிக்குச் சென்ருள். அவள் அருகில் வந்ததும் ஐயர் அவள் கைப்பூவில் ஒன்றைப்பொறுக்கி அது என்ன பூ என்று நுகர்ந்து பார்க்க நினைத்தார். அப்போது அவர் நீட்டிய இரண்டு விரல்களில் பூவுடன் ஒரு மடித்த காகிதமும் சிக்கிக்கொண்டது. பாமா மேலே செல்லவில்லை. அய்யர் அவளை ஏறிட்டுப்பார்த்தார். மனசில் சந்தேகம் கொண்டு கடிதத்தைப்பிரித்துக் கூடத்து எலெக்ட்ரிக் வெளிச்சத்தில் அதை வாசித்துப்பார்த்தார். இது யார் வெந்த உள்ளம் என்ற வார்த்தைகள் அவர் வாயிலிருந்து எழுந்தன. பாமாவை அவர் அதட்டிவிசாரித்தபோது அவள் சர்மாவின் தூண்டுதலை வெளியிட்டாள். அவர் முகக் கடுப்பைப்பார்த்து அச்சம் கொண்டு பாமா புஷ்பங்களை அப்படியே போட்டுவிட்டுத் தன் வீட்டிற்கு ஓடிவிட்டாள்.

சர்மா அவள் ஓடியதைப்பார்க்கவில்லை. எதிர் வீட்டுக் கீழ்ரூம் ஜன்னலையே ஏகாக்ரசித்தனுய் கவனித்துக்கொண்டிருந்தான்.

அந்த ஜன்னலின் பின்னிருந்து அவனை ஆராய்ந்து கொண்டிருந்த ஐயரின் நெருப்பைக்கக்கும் இரு கண்களை அவன் அறியவில்லை!

(தொடரும்.)

யானைக்காலுக்கு நிகரற்ற மருந்து (எலப்டோ பில்ஸ்)

ஆரம்ப அல்லது கடுமையான யானைக்கால் பிலேரியா வியாதிகளுக்கு நிச்சயமான நிவாரணி. பல நாள் அனுபவத்தின் பயனுக தயாரிக்கப்பட்டது. உத்திர வாதமுள்ளது. ஆபத்தில்லாதது. விலை ரூ. 9-8-0. தபால் செலவு பிரத்யேகம்.

SEENU & Co., P. B. No. 1638. (L) MADRAS 1.

சக்தி ஆரூடம்!

நீலகிரி பாரஸ்டு இலாகா மானேஜர் (Retd.) Sri. சாயிராம் T. V.) . சாமி 30-11-48ல் எழுதுகிருர்:—" தங்கள் ஜோதிடத்தில் எனக்கு அபார மதிப்பு. தங்களைக் கேட்காமல் நான் எதுவும் செய்வதில்லை."

1 முதல் 3 கேள்விகளுக்கு ரூ. 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—0. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. வி. பி. பி. தனி.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)

ஜெயா எலக்டிரிக் கம்பெனி,
சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கீயர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

வயிற்று நோவுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக்கூடி

R.P.S. முப்பு சூரண

ஆண், பெண் இருவரும். இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவிளுல் தயாரிப்பு வயிற்றுப்புண், அஜீரணம், மலசிக்கல் வயிற்று குமட்டல், வாந்தி. மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயிறு நோவுதல், குடல் மெகாந்தளிப்பு மேக சம்பந்தமான வியாதிகளையும் போக்கும். 4 அவு. பாட்டில் 1-க்கு விலை ரூ. 3. (த. செலவு தனி)

Dr. R. P. சாரதி. மகாத்மாகாந்தி சித்த வைத்தியசா



தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

7

மரணத்திற்கு முன்னும் பின்னும்

★

கண்ணன் அர்ஜுனன் கொண்ட சோகத்தையும் கலக்கத்தையும் சொல்லக் கேட்டார். சோகத்திற்காதாரமான அபிமானத்தை அகற்ற எண்ணி மேலும் உபதேசம் செய்யத் தொடங்கினார். விவேகத்திற்கிடமில்லாத அர்ஜுனனின் சோகப் பேச்சுக் கண்ணனுக்குச் சிரிப்பையே உண்டாக்கிவிட்டது அதனால் சிரித்துக் கொண்டே பேசியதாக 'முறுவலிப்பான் போல், ப்ரஹஸந், இவ' எனச் சொல்லப்படுகிறது.

சோகிக்க லாதவற்றைச்
சோகித்தாய் தொல்லறிவி
லாகப் படிபகர்வ தாகின்றாய்—
யோகத்தான்
மாயு முயுர்களையு
மாயா வுயிர்களையு
மாயுமவர் சோகியா ராங்கு.

(இ-ள்) சோகிக்க லாத வற்றைச் சோகித்தாய்—துக்கப்படத் தகாதவைகளைக் குறித்துத் துக்கப்பட்டாய். தொல்லறிவில் ஆகப்படி பகர்வது ஆகின்றாய்—ஞான சாஸ்திர வாதங்களையும் பேசுகிறாய். யோகத்தான்—யோக அறிவு காரணமாக. மாயும் உயிர்களையும்—அழியும் தேகங்களைப் பற்றியும். மாயா உயிர்களையும்—அழியாத ஜீவாத்மாக்களைப்பற்றியும். ஆயும் அவர்—ஆராயும் பண்டிதர்கள். சோகியார்—துக்கிக்கமாட்டார்கள் (ஆங்கு-அசை)

அஸோச்யாந்
அந்வஸோசஸ்த்வம்
3 4
ப்ரஜ்ஞா வாதாம்ஸ்ச பாஷஸே
3 3
கதாஸூந் அகதா ஸூந்ஸ்ச
3
நாநு ஸோசந்தி பண்டிதா:

(இ-ள்) அர்ஜுந—அர்ஜுந! த்வம்—நீ, அசோச்யாந்—துக்கிக்கத்தகாதவர்களைக் குறித்து, அந்வசோச:—துக்கித்தாய், ப்ரஜ்ஞாவாதாஞ்ச—ஞானவாதங்களையும், பாஷஸே—பேசுகிறாய், கதாஸூந்—அநித்தியங்களைப் பற்றியும், அகதாஸூந்—நித்திய (ஜீவாத்மா)ங்களைப் பற்றியும், பண்டிதா:—தெரிந்தவர்கள், நஅநுசோசந்தி—துக்கிக்கமாட்டார்கள்.

வாழ்வு, இறப்பு ஆகிய இரண்டில் ஏதேனுமொன்றை ஏற்கத் தயாராகிப் போர் செய்ய வந்த எதிரிகளைக்குறித்து அர்ஜுனன் துக்கம் கொண்டான் அல்லவா? அதையே கண்ணன் சுட்டிக் காட்டிக் காட்டுவதற்காக 'சோகிக்கலாதவற்றைச் சோகித்தாய்' என்றார் அல்லது "மரியாதை செய்யத் தகுந்த பீஷ்மத் துரோணர் மரணத்தை விரும்பியே நற்கதி பெறலாம்' என்று வந்திருக்கும்போது அவர்களின் மரணம் துக்கத்திற்கு விஷயமில்லை. அப்படியிருந்தும் துக்கித்தாயே" என்று பரிகாசமாகக் கூறியதாகவுமாம். விபரீத உணர்வும் கலக்கமும் வந்தபோது ஆசாரியனை அண்டி வணங்கி வினயமாகத் தன்னைத் தெளிவுறச் செய்ய வேணுமென்று பிரார்த்திக்கும்படிச் சாஸ்திரம் கூறுகிறதாகேறே அர்ஜுனன் கண்ணனை வணங்கித தன்னை அறிவுறுத்த வேண்டினான். அதனால் 'தொல்லறிவில் ஆகப்படி பகர்வதாகின்றாய்' என்று கண்ணன் கூறினார். 'இருப்பவர், இறப்பவர் இரு சாராரையும் கவலைக்கு விஷயமாக்காமல் யோகசாஸ்திர ஞானத்தால் தேகாத்ம விவேகம் உடையவர் ஒரேமாதிரியாகவே காண்பர்' என்று முடிவில் கூறினார். அவ்வாறு காண்பதற்குக் காரணம் அடுத்துவரும் செய்யுளில் சுருக்கமாகக் கூறப்படுகிறது இக்கருத்து பற்றி வரும் சுலோகம் நம் நாட்டுப் பிரபல ஆசாரியர்களால் பெரிதும் விவாதிக்கப்பட்டு வெவ்வேறான

அபிப்பிராயங்களும் கூற இடம் தருகிறது. இதையில் நமது ஆழ்ந்த சிந்தனைக்குள்ளாக்க வேண்டிய பகுதிகளில் இதுவும் ஒன்று.

இறையாகிய யானும்
இவ்வுயிரா நீயும்
முறையால் அரசர்இவர்
முற்று—மறையாலே
முன்னாளும் இன்மையில்லை
முற்றுமிதன் மேலாகும்
எந்நாளும் இன்மையில்லை யாம்.

(இ-ள்) இறையாகியானும்—தலைவனாகிய நானும், இ உயிரா நீயும் முறையால் அரசர் இவர் முற்றும்—இந்த உயிராகிய நீயும் வரிசையாக வந்திருக்கிற அரசர் (தலைவர்) முதலிய அனைவரும், மறையாலே—வேதப் பிரமாணமாக, முன்னாளும் இன்மை இலை-சென்ற காலங்களில் எல்லாம் இல்லாமல் இருக்கவில்லை. இதன் மேலாகும் எந்நாளும்—இதற்கு மேல் வரப்போகிற காலங்களில் எல்லாம், யாம் முற்றும்—நாம் அனைவரும், இன்மை இலை—இல்லாமல் இருக்கப் போவதில்லை.

நத்வே வாஹம் ஜாது நாஸம்

4
நத்வந்நேமே ஜநாதிபா:

4
நசைவ நபவிஷ்யாம:

ஸர்வே வயமத: பரம்.

(இ-ள்) அஹம் ஜாது—நான் ஒருக்காலும், ந ஸம் இதி ந—இல்லாதிருந்தேன் இல்லை, த்வம்—நீயும், (ஜாது நாஸீ:) ந—ஒருக்காலும் இல்லை என்றில்லை, இமே ஜநாதிபா:—இந்த ராஜாக்கள், (ஜாது ந ஆஸந்) ந— ஒருக்காலும் இல்லை என்றில்லை, ஸர்வே வயம்-நாம் எல்லோரும், அத: பரம்—இனிமேலும், நச பவிஷ்யாம (இதி) நைவ—இருக்கப்போகிறதில்லை என்று இல்லவே இல்லை.

'ஒருவன் அல்லது ஒருத்தி எனச் சொல்லப்படுவோர் யாவரும் ஒரு முறை பிறந்து வாழ்ந்து இறந்த பின் இருப்பதில்லை' என்ற எண்ணமே மனத்தில் எல்லோருக்கும் தடித்திருக்கிறது. 'முன்னை இல்லாமல் பிறக்கமுடியுமா? தோன்றியது மறையும் அல்லது விகாரப் படுமேயொழிய இல்லாமலே போகுமா?' என்ற சிந்தனைக்கு இடம் கொடாமலே பலர் வாழ்வதால் மரணத்திற்குப் பிந்திய காலங்களும் பிறப்பிற்கு முந்திய காலங்களும் பலருக்குப் புரியாத ரகசியமாக வேயிருக்கின்றன. அதனால் ஒருவனின் மரணம் அவனிடம் அபிமானம் கொண்ட பலருக்குத் துக்கத்தையும் பயத்தையும் விளைவிக்கிறது. அதைப்பரிகரிக்கவே நான், நீ, அவன் என்று விவரிக்கப்படுகிற எல்லோரும் மரணத்திற்கு முன் சென்ற எல்லாக் காலங்களிலும் மரணத்திற்குப் பின் வரப்போகிற எல்லாக்காலங்களிலும் ஆக முக்காலங்களிலும் இடையீடின்றி இருக்கவே செய்கிறார்கள் என்று கண்ணன் கூறினார்.

மூன்று
சித்தாந்தங்கள்

அழியாது விகாரமின்றி ஒரு படித்தாயிருக்கும் வஸ்து ஒன்று என்றும் பல என்று கூறும் வாக்கியங்கள் உபநிஷத்துக்களிலும் வியாஸர் இயற்றிய ப்ரும்ம சூத்திரத்திலும் காணப்படுகின்றன. 'வஸ்து' ஒன்று என்றே சொல்லும் வாக்கியங்களைப் பிரதானமாகக் கொண்டு பல என்று வரும் வாக்கியங்களை அவற்றிற்குச் சேரப் பொருள் செய்துகொண்ட சித்தாந்தம் அத்வைதமாகும். வஸ்துவைப் பலவாகக் கூறும் வாக்கியங்களுக்குப் பிராதான்யம் கொடுத்து அவற்றிற்குச் சேர ஒன்று என்று வரும் வாக்கியங்களைப் பொருள் செய்து கொண்ட சித்தாந்தம் த்வைதமாகும் ஒன்று என்றும் பல என்றும் வரும் எல்லா வாக்கியங்களுக்கும் சமமாகப்பிராதான்யம் கொடுத்து தன்னை யொழியப் பிறவற்றைத் தனக்கு அங்கமாகக் கொண்டு, தான் ஒன்றே அங்கி அல்லது சரீரமாய் இருக்கும் உண்மை வஸ்து ஒன்றே என்று கொண்ட சித்தாந்தம் விசிஷ்டாத்வைதமாகும். சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிந்துகொள்ளுவதற்கு மேற் கூறிய சித்தாந்தங்களை இரண்டாகவும் பிரித்துக்கொள்ளலாம். நித்திய வஸ்துவாகிய ஆத்மா அல்லது ப்ரும்மம் ஜீவர்களில் இருந்து வேறுபடாத ஒரே வஸ்து என்றும், ஜீவர்கள் பலவாக பேதப்பட்டுத் தோற்றுவதற்குத் தேக வேறுபாடுகளே காரணம் என்றும் அவ்வேறுபாட்டுக்காகக் காரணம் அஞ்ஞானம் அல்லது மாயையே என்றும் கூறுவோரை அபேதவாதிகள் என்று கூறலாம். நித்தியமான பரமாத்மா நித்தியமாய்ப் பலவாயிருக்கும் ஜீவாத்மாக்களின்னின்றும் வேறுபட்டது என்போரைப் பேதவாதிகள் என்று கூறலாம். அத்வைதத்தைப் பிரபலப்படுத்திய சங்கரரும், விசிஷ்டாத்வைதத்தைப் பிரபலப்படுத்திய ராமாநுஜநும் த்வைதத்தைப் பிரபலப்படுத்திய பெரியோர்களும் இதை உரை எழுதியுள்ளார்கள். இச்சுலோகத்திற்கு அவர்கள் கூறிய உரையின் சுருக்கத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

(சங்):—'நானும் நீயும் இந்த அரசர்களும் ஆகிய நாமெல்லோரும் தேகம் அழிந்த பின்னும் எப்பொழுதும் இருக்கிறோம்' என்ற பொருள்பட வரும் இதிற் பிரயோகிக்கப்பட்டிருக்கிற பன்மை பதங்கள் தேகத்தைப்பற்றியவைகளேயாகும். ஆத்மாவைப் பற்றியவையல்ல. பல தேகங்களிலும் உள்ள ஆத்மா ஒன்றே. அவ்வாறே நீ. நான் என்று பேதப்படுத்திப் பேசியதைத் தேகங்களைப்பற்றி வந்ததாகக் கொள்க. (அத்வைதம்)

(ராமா) 'பரமாத்மாவாகிய நான் எப்படி நித்தியமாயிருக்கிறேனோ அப்படியே ஜீவாத்மாக்களாகிய நீங்களும்நித்தியராயிருக்கிறீர்கள்' என்று பகவான் கூறுகிறார். இதனால் பரமாத்மாவாகிய ஸர்வேச்வரனிடத்திலிருந்து ஜீவாத்மாக்கள் ஒவ்வொன்றுக்கும் பரஸ்பர பேதம் உண்மை என்று பகவான் அருளியதாகவே கொள்ள வேண்டும். மோகம் அடைந்து கலங்கிய அர்ஜுனனுக்கு கண்ணன் ஆத்ம சொரூப நிச்சய தத்துவத்தை உபதேசிக்கிறார். இத்தருணத்தில் 'நான், நீ, இந்த ராஜாக்கள்' என்றும் 'நாமெல்லோரும்' என்றும் பகவான் சொல்லுவதால் பேத தத்துவமே சத்தியம் என விளங்குகிறது. ஆத்மாவில் பேதம், அஞ்ஞானம் அல்லது பொய், உபாதியால் கற்பிக்கப்பட்டது என்றால், உள்ளபடியே ஆத்ம தத்வத்தை உபதேசிக்கப் புகுந்த பகவான் பொய்யாகிய பேத ஞானத்தை உபதேசித்தார் என்பது அசம்பாவிதம் அபேதம் உண்மையானால் சுத்த நித்திய ஞான சொரூபனான பகவானுக்கு தத்துவத்தை உபதேசிக்கும் காலத்தில் 'நீ, நான், இந்த ராஜாக்கள், என்னும் பேத ஞானம் இருக்கல்கூடாது. இருப்பின், பகவானே சர்வக்ஞன், மாயாதீதன், ஞானத்தையே சொரூபமாகவுடையவன் என்று வேதத்திற்கொண்டாடுகின்ற வாக்கியங்கள் பொய்யாகும். 'பகவானும் அர்ஜுனனும் வேறல்லர்' என்றால் சர்வக்ஞனாகிய பகவான் உபதேசிக்கவேண்டியதில்லை. கண்ணனும் தன்னைச் சரணமடைந்த அர்ஜுனனைப்போல் அஞ்ஞானியாயின், உபதேசம் செய்வதில் பயனுமில்லை. ஆக இப்பகுதியால் பேதமே உண்மையெனக்கொண்டு உபதேசித்ததாகத் தோற்றுகிறது. (விசிஷ்டாத்வைதம்)

(ராக) பரமாத்மாபோல ஜீவனும் நித்யம். தேகமே அழியும் சுபாவமுடையது தேகத்தைப் பெறுவதும் விடுவதும் ஜீவனுக்கு இடைவிடாத காரியமாயிருக்கிறது ஆகவே அழியும் இயல்புடைய உடலைப்பற்றி நீ வருந்த வேண்டாம். (த்வைதம்)

'தேகம் பெறுமுன்னும் தேகம் அழிந்த பின்னும் தேகம் இருக்கும் போதும் ஆக முக்காலங்களிலும் அழியாது 'நான் நீ' என்னும் விவகாரயோக்யமான உயிர் இருந்து கொண்டே வருகிறது' என்று கண்ணன் கூறியதாக எல்லா சித்தாந்திகளும் ஏகமனதாக ஒப்புக்கொள்கின்றனர். அப்படியானால் மரணம் என்பது என்ன? மரணகாலத்தில் ஒருவனுக்கு என்ன சம்பவிக்கிறது? என்ற கேள்விகள் எழுகிறதல்லவா. அடுத்தபடியாக அக்கேள்விகளுக்கே விடையளிக்கிறார்.

ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் பம்பாய் விஜயம்

★

கலா நிலய ஆசிரியர் ஸ்ரீ. கே. ராஜகோபாலாசாரியார் ஜனவரியில் பம்பாய் சென்று தமிழ் இலக்கியம், கம்பராமாயணம் முதலியவைபற்றி சில உபந்நியாஸங்களை நிகழ்த்துவார். பம்பாயில் உள்ள தமிழர் அவருக்குப் போதிய வசதியும் ஆதரவும் தந்து உதவுமாறு கலாநிலயத்தார் கோருகின்றனர்.

சத்வைத்யசாலை நஞ்சனகூடு

"நஞ்சன்கூடு பல்பொடி"

பாகடெரியின் சிறந்த மருந்துகள்

குழந்தைகளுக்கு
12 காஸ்மன் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை

குடும்ப அவசியங்கள்
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிகளும், விடிபேதிக்கும் (காலரா)
23 பெமிரே (பெயின பாம) தலைவலி, வாயுபிடிப்பு .....

தினஉபயோகிகள்
61 நஞ்சன்கூடு பல்பொடி நீ 61. பல்உபாதைகளையும் கண்டிக்க
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்
55 இருசிப அஜீரண, பித்த சமனி.
{மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்

ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர்வீதி, மதறஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு. I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

டிப்போக்கள்: மதுரை. ... ..ணம், பம்பாய்.

சகல விதமான பட்டு நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புத்ய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி...சேலம்



பிரசித்தி பெற்ற

'காஸினோ ஸ்னோ'

உங்கள் முகப்பருவைப்போக்கி, சருமத்தை மிருதுவாக்கி முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது 'காஸினோ ஸ்னோவே' எங்கும்பொழுது "காஸினோ" மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS 1



ஜாதகம்! ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி. நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விபரம்:- 1 முதல 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2 3-க்கு மேல கேள்வி 1-க்கு அணா 8 ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35,

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்

Lt. Col. M. N. C. ஸர்ஜன ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல எனக்கு ரூ. 35 000 கிடைத்தது.

மானேஜர், விஜயா அஸ்ட்ரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

சதி-பதி வாழ்க்கை

விஞ்ஞான ரீதியாக இல்லற வாழ்க்கையின் சிற்றின்பச் சிறப்புக்களை வெகு நுணுக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துப் போதிக்கும் ஒரே தமிழ் நூல்

"மணவாழ்க்கையின் - - மர்மங்கள்"

என்னும் புஸ்தகமாகும். சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கி, கர்ப்பத்தடை முறைகளை நன்கு விளக்கி, மலட்டுத் தனத்தை முற்றிலும் போக்கி, கணவன் மனைவி வாழ்க்கையை வெகு உன்னதமாக்கி வைக்கும் அத்தனை இரகசியங்களும் பொதிந்த விஞ்ஞான நூல் ஒவ்வொரு ஸ்திரீ புருஷனும் தவறாது படிக்கவேண்டிய அபூர்வ ஔஷதம். மலிவுப்பதிப்பு ரூ. 3/12 பரிசுப்பதிப்பு ரூ. 5/8. தபால் செலவு வேறு. தேவைக்கு உடனே எழுதுங்கள்.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம்—சென்னை 4.

1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

தசை வலிகளுக்கு

உலகப் புகழ்பெற்ற ஜாம்பெக் நிவாரணமளிக்கும்

ஜாம்-பெக் மிருதுவாக தேய்த்தால் சீக்கிர நிவாரணமேற்படும். இவ்வற்புத மூலிகை மெழுகிலுள்ள மருந்து எண்ணெய்கள் சருமத்தினுள் புகுந்து களைப்புற்ற தசைகளுக்கும் கீல் பிடிப்புகளுக்கும் சமனமூட்டி குணமளிக்கும் பிராணிகள் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

சரும நோய்கள், காயங்கள், பூச்சிகடிகள், புண்ணுசி வலிக்கும் கால்கள், தசை வலி, தேகக் குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

ஏஜண்டுகள் மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

ஆருடம்!

உங்கள் எதிர்கால பலன்!!

★

தொழில், குடும்பம், காதல், பிரயாணம், வியாதி, வியாஜ்யம், வியாபாரம் முதலிய எல்லா விஷயங்கள் சம்பந்தமாகவும் குறிப்பாக பதில் அனுப்பப்படும். கட்டணத்திற்கான போஸ்டல் ஆர்டருடன் ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

கேள்வி 3-க்கு ரூ. 2.

மேற் கேள்வி ஒவ்வொன்றுக்கும் அணா 8.

10 கேள்விகள்

அல்லது

ஒரு வருஷ பலன் ரூ. 5.

வெளி நாடுகளுக்கு 5 ஷில்லிங்.

மீனாக்ஷி ஜோதிடாலயம்,

P. B. நெ. 1015, பம்பாய்.

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 87

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

குகன்

சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும்
சிறந்தது.



குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி



லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்:
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

க்ளுகோனேட் - டி

(கால்ஷியம் க்ளுகோனேட் விடமின் டி - யுடன்கூடியது)

க்ளுகோனேட் டி. மாத்திரையில் சுத்தமான கால்ஷியம் க்ளுகோனேட்டும் விடமின் டியும் மிகருசியுள்ள சாக்கலேட்டில் சேர்ந்திருப்பவைகள்: ஆதலால் குழந்தைகளும் பெரியோர்களும் அதை எளிதில் சாப்பிடமுடியும். கால்ஷியம் குறைவாயுள்ள எல்லாவியாதிக்கும் உபயோகமானது.

பெங்களூர், மல்லேஸ்வரத்தில் உள்ள தி மைசூர் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட்டாரால் தயார் செய்யப்பட்டது.

ஒரு

I·T·L

தயாரிப்பு

விற்பனை ஏஜன்டுகள்:

பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி 63. சென்னை.

D.J.K.78.T.M.

S.A.H.

TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S. I. R.*

தலையில்

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடித்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன் ?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை,

''ஆச்ரமம்'', க்ராஸ்கட் ரோட்,

பவர் ஹவுஸிற்கு அடுத்தது

கோயமுத்தூர்.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

நிபுணர் ஒரு நடிகர்

மீன் விழுங்கி சாமியார்.

வைரம் வாங்கும் விஷயத்தில் நிபுணரின் யோசனையை எவ்வளவு சுலபமாக காசில்லாமலேயே—பெற விரும்புகிறீர்கள்?

ஆனால்.........நிபுணர் மட்டும் ஏமாந்தவரா—நடிப்பில் கைதேர்ந்தவருக்கு உங்களை மயக்குவது ஒரு நிமிஷ வேலையே...எல்லாம் மோசடிதான்..... உங்கள் நலனுக்காகவே அவர் தமது நிபுண (!) யோசனையை தயவுடன் வெளியிடுவதாக உங்களை எளிதில் நம்பச்செய்கிறார்.

இந்த ஜோடியின் பொருத்தத்தைக் கவனித்தீர்களா? ஒன்று — வைரம் வாங்குபவர்; நிபுணரிடம் தமக்குள்ள சொல்ப தொடர்பை உபயோகித்து அவரிடம் இலவச யோசனை பெற விரும்புகிறார். நிபுணரோ வாங்குபவரின் மானஸீகத் தொடர்பை ஞாபகப்படுத்தி தாம் சுயலாபங்கருதாமல் பாரபக்ஷமற்ற யோசனையைக் கூறுவதாக நம்பச்செய்கிறார்!

போலி வேஷத்தில்

நரியும் நாரையும்

நிபுணர் யாதொரு முதலுமின்றி லாபமடிப்பவர்—சரக்குமில்லை யாதொரு பயமுமில்லை. வெறும் ஏமாற்று வார்த்தைகளைக்கொண்டு பிழைப்பவர். அவநம்பிக்கை கொண்டவர்களிடம் நாரையைப்போன்று நடித்துப் பயனடைவது அவரது தப்பு அல்ல.

ஆக நிபுணரும், வியாபாரியும் சேர்ந்து உங்கள் பாட்டுக்குத் தகுந்த நாட்டியமாடி தமது வியாபார தந்திரத்தைக் கையாள்வது சரியே. இதற்கு மூலகாரணம் நீங்களேதான்.

நாணயத்திற்குப் பிரக்யாதி பெற்று நிலைத்து வியாபாரம் செய்யும் நம்பிக்கையான நகை வியாபாரியிடம் நம்பிக்கை வைத்தால்தான் பழுதின்றி வைரம் வாங்குவது சாத்தியம். சுயலாபமே கண்ணாயிருக்கும் தரகரது போலி வார்த்தைகளை நம்பினால் வீணாக உங்கள் பணத்திற்கே நஷ்டத்தை தேடுகிறீர்கள்.

மிக உயர்வான ரகங்கள்

ஸூரஜ்மல்ஸ்

1895முதல் நாணயத்திற்சிறந்த நகைவியாபாரிகள்

313, எஸ்பிளனேட் — மதராஸ்.